24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 222 ஆனி 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 09 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

ரக்னா லங்கா தலைவர் நேற்றுக் கைது

கொழும்பு, ஜூலை 9
மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் ஒன்றை முன்னெடுத்துச் சென்றமை தொடர்பில் இடம்பெறும் குற்றவியல் விசாரணைகளுக்காக ரக்னா லங்கா நிறுவனத்தின் தலைவர் விக்டர் சமர வீர கைது செய்யப்பட்டுள்ளார்.
நேற்று அவர் சி.ஐ.டி.யில் சரணடைந்த பின்னகைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர தெரிவித்தார்.
மிதக்கும் ஆயுதகளஞ்சிய சாலை விவகாரம் தொடர்பில், எவன்கார்ட் மெரிடைம் நிறுவனத்தின் தலைவர் நிசங்க யாப்பா சேனாதிபதி உள்ளிட்ட எட்டு பேரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்து 19

அடுத்தடுத்து வடமராட்சியில் சிக்குகிறது பெருமளவு கஞ்சா

145 கிலோ கஞ்சா நேற்றும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் அடுத்தடுத்து பெருமளவு கஞ்சா கைப்பற்றப்படுகிறது. வடமராட்சி திக்கம் பகுதி 19

தேர்தல் பரப்புரைக்காகவே ஞானசாரருக்கு விடுதலை!

தேச விடுதலைக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 9
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் பரப்புரைக்காகவேவே ஞானசார தேரரைச் சிறையில் இருந்து விடுதலை செய்துள்ளார் என்று குற்றஞ் சாட்டியுள்ளார் தேச விடுதலைக் கட்சியின் பிரதித் தலைவர் கலகம தம்மரங்சி தேரர்.
சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அரசின் நடவடிக் 19

ஷரிஆ சட்டத்தில் சாவுத் தண்டனை? விசாரணைகளை ஆரம்பித்தது சி.ஐ.டி.

கொழும்பு, ஜூலை 9
காத்தான்குடி பிரதேசத்தில் 20 பேருக்கு ஷரிஆ சட்டத்தின் கீழ் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை தொடர்பாகத் தம்மிடம் தரவுகள் உள்ளன என்று கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவு பிரதானி மூத்த பிரதிப் பொலிஸ் மா 19

மின்சார வழங்கலில் தடங்கல் ஏற்படலாம்!

கொழும்பு, ஜூலை 9
மின்சார சபைக்கு எரிபொருள் வழக்குவதை நிறுத்துவதற்கு பெற்றோலியத் துறை 19

பூஜித், ஹேமசிறியை விசாரணை செய்ய நீதியரசர்கள் ஆயம்

கொழும்பு, ஜூலை 9
கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரிப்பதற்காக 7 பேர் கொண்ட உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் குழாம் நேற்றுப் பெயரிடப்பட்டுள்ளது. 19

முதன்மை கட்சிகள் மீது வாசுதேவ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 9
அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக முதன்மைக் கட்சிகள் மௌனம் காக்கின்றன. அது திரைமறைவில் தேர்தலைப் பிற்போடுவதற்கான கலந்துரையாடல்களை அவர்கள் மேற்கொள்கின்றனரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.
இவ்வாறு ஜனநா 19

நம்பிக்கையில்லா தீர்மானம் இரண்டு தினங்கள் விவாதம்

கொழும்பு, ஜூலை 9
அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நாளை மற்றும் நாளை மறுதினம் திகதிகளில் விவாதத்தை நடத்துவதற்குக் கட்சித் தலைவர்கள் கூட் 19

விக்கி, முன்னணி விடாப்பிடி; சமரச முயற்சிகள் பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
தமிழ் மக்கள் கூட்டணியையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் சமரசப்படுத்த எடுத்த முயற்சிகள் ஆரம்பகட்டத்திலேயே பிசுபிசுத்துப் போயுள்ளன. 19

தேசிய மட்ட வீரர்களுக்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடக்கு மாகாணத்தில் இருந்து தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித் 19

நந்தன முனசிங்கவிடம் 6 மணி நேர விசாரணை

கொழும்பு, ஜூலை 9
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடைபெற்ற சமயம் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க நேற்று சிறப்பு விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
பொலிஸ் சிறப்பு விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட அவர், பொலிஸ் சிறப்புப் 19

கல்முனை விவகாரத்தில் ரணில் சொன்னதைச் செய்ய வேண்டும்

அவருடனான சந்திப்பின்போது தமிழ்க் கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 9
கல்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு நியமித்த கணக்காளர் உடனடியாகப் பிரதேச செயலகத்தில் தனது பணியை பொறுப்பேற்றே ஆகவேண்டும் என்ற கூட்டமைப்பின் தலைவரின் கோரிக்கை தலைமை அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராஜா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தலைமையிலான குழுவினர் நேற்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடினர். அம்பாறை மாவட்ட கல்முனை வடக்கு பிரதேச சபை விடயம் காங்கேசந்துறை துறைமுகக் காணிக்கு அருகில் உள்ள மக்கள் நிலம் மற்றும் மயிலிட்டி வாழ் மக்களின் நிலங்கள் தொடர்பிலேயே கலந்துரையாடப்பட்டது.
கல்முனை வடக்கு உப பிரதேச செயலர் பிரிவுக்கு நியமித்த கணக் 19

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்
UGC Recognized International Degree
One year Top Up Degree
www.blccampus.edu.lk
• Bachelor of Information Technology
• Bachelor of Business Administration
• BSc in Psychology
• Bachelor of Business in Banking & Finance
• B.Ed (Teaching of English as Second Language-TESL)
✓ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✓ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்
For more information: 0777 174 443
BLC CAMPUS
Entry requirement
HND / any Equal Qualification in the similar study
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk

மகரம் ராசிக்காரர்களின் குணநலன்கள்

மகரம் ராசிக்காரர்களின் மிகப்பெரிய பலம், பலவீனம் இரண்டுமே பிடிவாதம்தான். எதையும் முடிக்க வேண்டுமென்று முடிவு செய்துவிட்டால், எந்தவித சமரசமும் இல்லாமல் வெற்றி கிடைக்கும்வரை போராடி முடிப்பார்கள். தன்முனைப்பு மிகவும் அதிகமுள்ளவர்கள். தான்மட்டும் நன்றாக இருந்தால் போதுமென்று நினைக்க மாட்டார்கள். தன்னைச் சார்ந்தவர்களையும் வாழவைக்க முற்படுவார்கள். ஆனால், உதவிக்குத் தகுதியானவர்களைச் சரியாகத் தேர்வு செய்து உதவுவார்கள்.

மகர ராசிக்காரர்கள் உழைப்புக்கு அஞ்சாதவர்கள். வேலை பார்க்கும் நிறுவனத்தில் எவ்வளவு வேலைகள் இருந்தாலும் அவற்றை இழுத்துப்போட்டு செய்து நற்பெயரெடுப்பார்கள். சிலருக்கு வீட்டில் இருக்கப் பிடிக்கும். சிலருக்குக் கோயிலில் இருக்கப் பிடிக்கும். சிலருக்குக் கேளிக்கை சுற்றுலாக்கள் பிடிக்கும். ஆனால், இந்த மகர ராசிக்காரர்களுக்கு அவர்கள் வேலை பார்க்கும் நிறுவனத்திலிருக்கவே பிடிக்கும். கடைக்காரர்களென்றால் இவர்களின் கடையிலேயே அதிக நேரத்தைச் செலவிடுபவர்களாக இருப்பார்கள்.

மகர ராசிக்காரர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தங்களை மாற்றிக்கொள்ளாதவர்கள். ஒருசெயலில் முடிவெடுக்க வேண்டுமென்றால் எல்லோரிடமும் அபிப்பிராயங்கள் கேட்டுக்கொள்வார்கள். ஆனால், முடிவில் அவர்கள் நினைத்து வைத்திருந்த முடிவை மட்டுமே செயல்படுத்துவார்கள். மற்றவர்கள் செய்யும் செயலைக் காப்பியடிக்க மாட்டார்கள். தனித்துவமான காரியங்களில் மட்டுமே ஈடுபடுவார்கள்.

மகரம் சனியின் காரகத்துவம் பெற்ற ராசி என்பதால், கறுப்பு நிறம் இவர்களுக்கேற்றது.

புகழ்பெற்ற நீதிபதிகள், வக்கீல்கள், பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், கிராம ஊராட்சித் தலைவர்களெல்லாம் மகர ராசியைச் சார்ந்தவர்களாக இருப்பார்கள்.

ஜூலை மாத ராசியலன்கள் - 2019

சிம்மம்

சூரியனை அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசி நேயர்களே... இந்த மாதம் உங்கள் ராசி அதிபதி லாப ஸ்தானத்திலும், விரைய ஸ்தானத்திலும் சஞ்சரிக்கிறார். கடல் கடந்து செல்லும் யோகம் கைகூடி வருகிறது. நீங்கள் நினைத்தது நிறைவேறும். செலவுகள் அதிகம் வந்தாலும் சுப செலவுகள்தான் ஏற்படும்.

இந்த மாதம் உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், ராகு, விரைய ஸ்தானத்தில் செவ்வாய் சுக்கிரன், சுக ஸ்தானத்தில் குரு, பஞ்சம ஸ்தானத்தில் சனி கேது என கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. மாத பிற்பகுதியில் சூரியனும், சுக்கிரனும் உங்க ராசிக்கு விரைய ஸ்தானத்திற்கு மாறுகின்றனர்.

இந்த மாதம் நீங்கள் எடுக்கும் முடிவுகளில் அவசரம் காட்டவேண்டாம். நிதானமாக முடிவுகளை எடுங்கள். திருமணமோ, வேலையோ எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவு செய்வது அவசியம். நடைபெறும்.

பிரச்சினைகள் தீரும்

ஜூலை மாதம் மேன்மை உருவாகும் மாதம் சிம்மத்தின் அதிபதி சூரியன் 17ஆம் தேதி வரை லாபத்தில் ராகு, சுக்கிரன் உடன் சஞ்சரிக்கிறார். சூரியன் புதன் வீட்டில் லாப ஸ்தானத்தில் ராகு உடன் சுக்கிரன் உடன் இணைந்திருப்பதால் நன்மைகள் அதிகம் நடைபெறும். முதல் 15 நாட்கள் வரை லாபத்தில் இருக்கும் சூரியனால் உயர் பதவிகள் பட்டங்கள் தேடி வரும். புரமோசன் கிடைக்கும். பிரச்சினைகள் சரியாகும். வேலை மாற்றம் பற்றிய தகவல்கள் வரலாம். இடமாற்றங்களும் வரும்.

கவனம் தேவை

17ஆம் தேதிக்கு மேல் கடகத்திற்கு வந்து செவ்வாய் புதன் உடன் இணைகிறார். விரையத்தில் இருக்கும் சூரியனால் வீடு வாகனங்கள் வாங்க முதலீடுகள் செய்யலாம் ஆனால் எச்சரிக்கை தேவை. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பொருளாதார மேம்பாடு உற்சாகமாக இருக்கும்.

குருவின் பார்வை 12ஆம் வீட்டில் செவ்வாய் புதன் மீது மாத பிற்பகுதியில் இணையும் சூரியன் சுக்கிரன் மீது விழுவதால் கடன்கள் அடைபடும். கடன்கள் அதிகம் இருப்பவர்களுக்கு வருமானம் அதிகம் பயன்படும்.

வெளிநாட்டு பயணம்

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் நல்ல விசயங்கள் அதிகம் நடைபெறும். குருவின் பார்வை ராசிக்கு 12ஆம் வீட்டில் விழுவதால் கடல் கடந்து செல்லும் பயணம் அமையும். வெளிநாடு பயணம், தூர தேச பிரயாணத்தினால் வருமானம் அதிகரிக்கும். ஆதாயங்களும் அதிகரிக்கும். இந்த மாதம் சிம்மத்திற்கு லாபங்கள் நிறைந்த மாதம். நினைத்தது நிறைவேறும்.

மாணவர்களுக்கு யோகம்

ஐந்தாம் வீட்டில் சனி கேது சேர்க்கை இருப்பதால் திருமணம் நடைபெறுவதில் தடை ஏற்படும். சனி இந்த மாதம் 5ஆம் இடத்தில் இருப்பதால் சோர்வு குழப்பத்தை ஏற்படுத்துவார். 12ஆம் வீட்டில் புதன் மறைந்திருக்கிறார். மறைந்த புதன் நிறைந்த கல்வியைத் தருவார். மாணவர்களுக்கு நினைத்த படிப்பு படிக்க காலம் கணிந்து வருகிறது. உயர்கல்வி யோகம் கூடி வருது. அசாத்திய திறமைகள் வெளிப்படும். மாணவர்களுக்கு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் நல்ல வாய்ப்பு அமையும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள்.

நீங்கள் இந்த ராசியா? அப்போ அதிர்ஷ்டசாலிகள் தான்!

இந்த உலகம் என்பது மிகவும் பெரியது. உலகம் முழுவதையும் பார்க்க வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் இருக்கும்.

ஆனால் அனைவராலும் அது முடியாது. சிலர் வீடுதான் உலகம் என்று வாழ்வார்கள், சிலரோ வீட்டை தாண்டி வெளியே சென்று புதிய இடங்கள், புதிய அனுபவங்கள், புதிய நபர்கள் என அனைத்தையும் சந்திக்க விரும்புவார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு வீடு ஒரு சிறை போல தோன்றும். எனவே இவர்கள் முடிந்தளவு வீட்டை விட்டு வெளியே செல்ல முயற்சிப்பார்கள். ஜோதிட சாஸ்திரத்தின் படி சில ராசிகளில் பிறந்தவர்கள் இந்த குணத்துடன் இருப்பார்கள். இந்த பதிவில் ஏந்தெந்த ராசிக்காரர்கள் இப்படி சிந்திப்பார்கள் என்று பார்க்கலாம்.

விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்கள் அவர்களின் சொந்த இடத்திலிருந்து எவ்வளவு தூரம் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் செல்ல விரும்புவார்கள்.

இதனால் அவர்கள் வாழ்க்கையில் புதிய கண்ணோட்டத்தை பெறலாம் என்று நம்புவார்கள். தூரமாக செல்வது விருச்சிக ராசிக்காரர்களின் வாழ்க்கையைப் பற்றி உற்சாகமாக உணரவைக்கிறது.

மேலும் வாழ்க்கையில் எப்படியெல்லாம் மாற்றங்களை உண்டாக்கலாம் என்றும் இவர்கள் எண்ணுவார்கள்.

ஒவ்வொரு பயணமும் இவர்களின் ஆற்றலை அதிகரித்து கொண்டே இருக்கும்.

மேஷம்

மேஷ ராசிக்காரர்கள் எப்பொழுதும் சாகசங்களை விரும்புபவர்களாக இருப்பார்கள், பயணம் செய்வதை விட பெரிய சாகசம், வேறு என்ன இருந்துவிட போகிறது.

வெளியே செல்வதன் மூலம் இவர்கள் புதிய கலாச்சாரங்கள், உடைகள், வாழ்க்கை முறைகளுக்கு இவர்கள் தங்கள் மனதை திறக்கிறார்கள்.

எந்தவித யோசனையுமின்றி புதிய சூழ்நிலையில் குதிப்பதற்கு தனி தைரியம் வேண்டும் அது இவர்களிடம் மிகவும் அதிகமாகவே இருக்கிறது. வாழ்க்கை தனக்கு அளிக்கும் அதனை அனுபவங்களையும் ஏற்றுக் கொள்ள இவர்கள் தயாராக இருப்பார்கள்.

கும்பம்

கும்ப ராசிக்காரர்கள் எங்கு சென்றாலும் அங்கு நண்பர்களை உருவாக்கி கொள்கிறார்கள். இதற்கு காரணம் அனைத்து மாற்றங்களையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கும் அவர்களின் குணம்தான்.

இவர்கள் மிகவும் சுதந்திரமாக வாழ விரும்புவார்கள் அது தனக்கு வீட்டை விட்டு வெளியே சென்றால்தான் கிடைக்கும் என்று நம்புபவர்கள் இவர்கள்.

சவால்களை ஏற்றுக்கொண்டு அதனை சாதிப்பதில் இவர்களுக்கு அலாதி பிரியம் இருக்கும். ஒருபோதும் தங்கள் வீட்டில் உதவிக்காக சென்று நிற்பதை இவர்கள் விரும்பமாட்டார்கள்.

சிம்மம்

இவர்கள் வீட்டை விட்டு வெளியே செல்லும் வரை இவர்களுக்கான அடையாளத்தை பெறமுடியாது. அவர்களுக்கு தெரிந்தவர்கள் அவர்களை சுற்றி இருக்கும்போது அவர்களுக்கான அடையாளத்தை உருவாக்குவது அவர்களுக்கு மிகவும் கடினமாகும்.

சிம்ம ராசிக்காரர்கள் வெளியிடத்திற்கு சென்றால்தான் ஒரு புதிய தொடக்கத்தை தொடங்குவார்கள். மேலும் அவர்கள் விரும்பிய வர்களாக மாற அவர்கள் வெளியே வந்தால்தான் முடியம். இவர்கள் தனியாக இருக்கும் பொது இவர்கள் மிகவும் வலிமையானவர்களாகவும், தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

தனுசு

இவர்களுக்கு வெளியே செல்லும் வாய்ப்பு கிடைத்தாலும் முதல் முறை அதனை தவற விட்டுவிடுவார்கள். இவர்கள் வெவேறு இடங்களில் வாழ்வதன் மூலம் தங்கள் வாழ்க்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்துவார்கள். புதிய விஷயங்களும், அனுபவங்களும் இவர்களுக்கு ஊக்கத்தைத் தருகிறது. இவர்கள் சுதந்திரத்தை உணரும்போது அதனை மேலும் மேலும் அனுபவிக்க விரும்புவார்கள்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மாள்
தேவஸ்தானம்
திருமஞ்சத் திருவிழா
09.07.2019

நிகழும் விகாரி வருடம் ஆனி மாதம் 24 ஆம் நாள் 09.07.2019
செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில்
வசந்த மண்டப பூசை இடம்பெறும்.

மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய திருமஞ்சத்தில் விநாயகப்பெருமான், முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக அன்னை வீரமாகாளி அம்பாள் ஆரோகணித்து இலங்கை, இந்தியா புகழ் பூத்த தவில் நாதஸ்வர வித்துவான்களின் இசைமாரி முழங்க வீதி வலம் வர அம்பாள் அருள்பாலித்துள்ளாள். அடியவர்கள் அனைவரும் அம்பிகையின் அருளை பெற்றுக்கொள்வோமாக.

பகல் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) இடம்பெறும்.
இரவு போசனமும் வழங்கப்படும்.

மாலை விஷேட மேளக்கச்சேரி

- **பிச்சையப்பா புதல்வர்கள் றஜீவன் குழுவினர்** - ஈழநல்லூர்
- **உதயசங்கர் குழுவினர்** - ஈழநல்லூர்
- **காணவிநோதன் மாக்கையா** - இணுவில்
- **நாதஸ்வர இளவரசு சிவகுமார் குழுவினர்** - தொல்புரம், வழக்கம்பரை.
- **M.S.புதல்வர்கள் தவில்** - தொண்டைமானாறு

நவா ஒளி அமைப்பு - பண்டத்தரிப்பு

தேவன் ஒலி அமைப்பு - பண்டத்தரிப்பு

"வீரமாகாளியைச் சரண் புகுந்தால் வீர சக்தி பெறலாம்"

இல.261, பருத்தித்துறை வீதி,
வீரமாகாளி அம்மன் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமஞ்சத் திருவிழா உபயகாரர்
அம்பாள் மரக்காலை.

Yarl Smart Water Solution (Pvt) Ltd

உங்கள் வீடுகளில் உள்ள கிணற்று
நீர் பிரச்சினைகளில் இருந்து
விடுபட வேண்டுமா?

LIFE TIME Service Warranty

30 Liters Per Hour

60 Liters Per Hour

SPECIAL OFFER



250 LPH Water Purification Plant.





யாழ் மக்களின் நீர்ப்பிரச்சினைகளுக்கு

Hotline:-
077 057 3684
077 473 9802
077 112 6410

ஏற்ற முறையில் 5000/- இல் இருந்து
நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.

நீரில் உள்ள பிரச்சினைகளின்
தீர்வாக நாங்கள்....

Head Office:- No.341,K.K.S Road,
Jaffna.
021 430 0044

Branch:-Karadippokku Junction,
Kilinochchi.
021 430 0045

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம், மாதகல் ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்	:- 13
ஆதன இல	:- 44/10
வீதி	:- சென் அன்ரனிஸ்வீதி
கிராம சேவையாளர் பிரிவு	:- J/153

எமது இடாப்பில் வட்டாரம் 13. சென்அன்ரனிஸ் வீதி. ஆதன இல. 44/10 இல் உ.கோ. S.செல்வநாயகம் என்னும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு பகுதி தற்போது வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிளான் இறை **" மல்லன்புலம்"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 1 1/2 கொண்ட இவ்வாதனம் அந்தோனியார் வீதி பெரியவிளானைச் சேர்ந்த மிக்கேல் மரிய நாயகமும் பெண் குணகுந்தம்மாவும் ஆகிய இவர்களால் அவ்வூரைச் சேர்ந்த சந்திரகுமார் பெண் இந்திரா ஆகிய இவர்களுக்கு சீதன உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் சோமசுந்தரம் தேவராஜா அவர்கள் முகதாவில் நிறை வேறிய 7036 ஆம் இலக்க 30.05.2015 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நிலஅளவையாளர் S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2019/71 ஆம் இலக்க 04.02.2019ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது **"மல்லன்புலம்"** நிலப்பரப்பு 01 குளி 8.17 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது சந்திரகுமார் பெண் இந்திரா என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்புக்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன். அத்துடன் இவ்ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாகக் காணப்படுவதால் இவ்விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றது.

தாய் உறுதிகளின் விவரம்

01) வெளிப்படுத்தல் உறுதி இல: 5509/ 20.11.2005 சிமியோன் செல்வநாயகமும் பெண் அமலோற்பவமும் என்போரால் தமக்குச் சொந்தமெனவும்.
02) சீதன உ.இல.7769 / 16.12.2010 சிமியோன் செல்வநாயகமும் பெண் அமலோற்பவமும் என்போரால் மரியநாயகம் பெண் குணகுந்தம்மாவுக்கு வழங்கப்பட்டது.



அ.ஜெபநேசன்
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(C/9038)(11,17)

வேலையாள்கள் தேவை
அனுபவம் உள்ள மேசன் வேலையாள்கள் தேவை.
077 138 3316, 076 660 1600
(CS/26559)(11)

சிங்கள வகுப்பு
பாடசாலை மாணவர்களிற்கான சிங்கள வகுப்பு
071 867 1055
(CS 26624)(14,17)

விற்பனைக்கு
அச்சக சைனாகட்டர், கொம்பியூட்டர் மற்றும் தளபாடங்களும் விற்பனைக்குண்டு.
077 716 5589/076 834 5589
(CS 26625)(14,17)

வீட்டுப்பணிப்பெண் தேவை
தேக சுகயீனமுடைய பெண் ஒருவரை பராமரிக்கவும் சமையல், வீட்டுவேலைகளையும் பார்க்கக் கூடிய 50 வயதிற்குட்பட்ட பெண் தேவை.
076 133 7827
(CS 26655)(14,17)

காணி விற்பனைக்கு
கரந்தன் நீர்வேலி வீதியில் 100m உள் வீதியில் ஊரெழு அம்மன் கோயிலுக்கு அண்மையாக 15 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
077 917 1511
(ANN/893)(01,17)

தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஹொட்டல் ஒன்றுக்கு றொட்டி & றைஸ் வேலைக்கு ஆள்கள் தேவை.
✪ தங்கி நின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு :- 076 025 5295

F.S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

நன்றி தெரிவிக்கின்றோம்

அனைத்துலக நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதி நாள் அலங்கார ஊர்தி பவனியின் போது சங்கிலிய மன்னன் வேடமிட்டு காட்சியளித்து களிப்பூட்டியவரும் பூதத்தம்பி, திப்புசுல்தான் நாடகங்களில் புகழடைந்தவரும் வண்ணை கலைவாணர் நாடக மன்ற நடிகர்

கேசாவிலூர் கலாபூசணம்

T.S. லோகநாதன்

அண்மையில் கௌரவ **மாவை சேனாதிராசா** அவர்களால் கௌரவிக்கப்பட்டு **"கலைச்சூரியர்"** என்னும் விருதையும் தமது 35 ஆவது சமய அறிவு பரிசளிப்பு விழாவில் வழங்கி கௌரவித்த வண்ணை ஸ்ரீ காமாட்சி சன சமூக நிலையத்தினருக்கு அவரது குடும்பத்தினர் நன்றியுடன் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொழில் வாய்ப்பு

இலங்கையின் முன்னணி வகிக்கும் நிதி நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.மாவட்டத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1). நிதி திட்டமிடலாளர்
வயதெல்லை - 20 - 45
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
க.பொ.த.சாதாரண பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

2). அணி முகாமையாளர்
வயதெல்லை - 25 - 45 (ஆண், பெண்)
சந்தைப்படுத்தல்/ காப்புறுதி துறை/ வங்கித் துறையில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.
✪ இலக்கினை அடையக் கூடிய திறன்.

குறிப்பு : மேலுள்ள பதவி வெற்றிடத்திற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உங்கள் சுயவிபரங்களை தொலைபேசி இலக்கங்களுடன் கீழ்காணும் முகவரிக்கு 17.07.2019 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

✪ பதவி தலைப்பினை உங்கள் விண்ணப்பத்தின் மூலையில் குறிப்பிடவும்.

விளம்பர இல: IF/1012,
மே.பா.உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 04 . 1925

மறைவு
07 . 07 . 2019

திருமதி பாக்கியம் பொன்னுத்துரை

காரைநகர் மொந்திபுலத்தைப் பிறப்பிடமாகவும், காரைநகர் சந்தம்புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் பொன்னுத்துரை 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தெய்வானை தம்பதிகளின் அன்புமருமகளும், நீலாம்பிகை, நாகரத்தினம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் செல்வராணி, உமாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற க.ஜெகசோதி மற்றும் தி.திருநாவுக்கரசு, திருமதி பா.அருளாம்பிகை, பொ.லோகேஸ்வரன், ச.சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவானந்தன், ராதா, சர்வானந்தன், சாந்தினி, நிரஞ்சன், காலஞ்சென்றநிஷாந்தன் மற்றும் நிர்மலன், பிரசாந்தன், பிரவீனா, காயத்திரி, தினேசன், கஜன், ரவீந்திரன், ஜெயந்தா, கிரிஷா, விஷ்ணுதரன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சீத்தானி, நதினி, ஜானுசா, ஹர்ஷா, அபிநயா, லக்ஷா, ஹரிணி, மகதி, நிரந்தரி, போஜன், சஞ்சரி, நதுனன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற க.முருகேசு மற்றும் நல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சிதம்பரப்பிள்ளை, செல்லம்மா, சௌந்தரம், பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2019) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுறோட்,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 241 4137

கிழுவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர்ப் பூக்கள்



எமது கலாமன்றத்தின் கௌரவ உறுப்பினர்
கலைமாடக்கோன் சண்முகம் சிவஞானம்
அவர்களின் அன்பு மாமியாரும்
சிவஞானம் உமாதேவியின் பாசமிகு தாயாருமாகிய

பொன்னுத்துரை பாக்கியம்

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் குஞ்சிதபாதம் சேர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி ! சாந்தி ! சாந்தி !

நிர்வாக சபையினர் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.
கிழுவன்காடு கலாமன்றம் காரைநகர் கிளை - யாழ் கிளை

31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம்
14 . 10 . 1943

மறைவு
09 . 06 . 2019

கோப்பாயைப் பிறப்பிடமாகவும்
கந்தரோடையை வசிப்பிடமாகவும்
கொண்ட

சிவசுப்பிரமணியம் தவமணிதேவி

எமது குடும்பத்தலைவி அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தும் தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுசி இல்லம்,
கல்லூரி வீதி, கந்தரோடை. (CS 23742)(14,17)

குடும்பத்தினர்.

விடுகதை

1. உடலோ வெள்ளை நிறம், உள்ளமோ தங்க நிறம் அது என்ன?
2. சிவப்பு தொட்டியில் மலரும் பூ, சிடு சிடுத்தால் மறையும் பூ அது என்ன?
3. என் உடம்பெல்லாம் முள். ஆனால் உள்ளமோ தேன் சுவை நான் யார்?
4. மீன் பிடிக்க தெரியாது. ஆனால் வலை பின்னுவான் அவன் யார்?
5. சுற்றிக் கொண்டேயிருப்பேன். ஆனால் எனக்கு தலை வலிக்காது நான் யார்?
6. இரவு ராணி அவள். தினமும் விழித்திருப்பாள். மாதம் ஒரு முறை உறங்கிடுவாள் அவள் யார்?
7. சட்டை மேல் சட்டையாய், பல சட்டை போட்டவன். சட்டைகளை கழற்றிப் பபார்த்தால், உடம்பை மட்டும் காணோம் அவன் யார்?
8. வீட்டிற்குள் இருப்பான். உலகத்தை காட்டுவான் அவன் யார்?
9. சூரிய ஒளியில் உணவை சமைப்பேன். சுற்றுச் சூழலைப் பேணிக் காப்பேன் நான் யார்?
10. பல் துலக்க மாட்டான். ஆனால் இவன் பல் எப்பொழும் வெள்ளை இவன் யார்?

விடைகள்

1. முட்டை
2. சிரிப்பு
3. பலாப்பழம்
4. சிலந்தி
5. காற்றாடி
6. நிலா
7. வெங்காயம்
8. கணினி, தொலைக்காட்சி
9. மரம்
10. வெள்ளைப் பூண்டு

மரவாத்து

பலவகை வாத்துக்களில் மர வாத்து தான் மிகப்பெரியது. இதன் இறக்கைகள் வெள்ளையாக இருக்கும். ஆண் வாத்து 2.7 கிலோ எடை இருக்கும். பெண் வாத்து 2.0 கிலோ வரை இருக்கும். இந்த வகை வாத்துக்களின் உடல் மின்னும் கறுப்பு அல்லது பிரவுன் நிறத்தில் இருக்கும். தலை வெள்ளையாக இருக்கும். அதில் அடர்த்தியாக கறும் புள்ளி இருக்கும். சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்து இதன் வர்ணம் மாறும். இதன் வலுவான கால்கள் மஞ்சள் நிறத்திலும், கண்கள் பளிச்சென ஆரஞ்சு நிறத்திலும் இருக்கும்.
கடந்த அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வகை வாத்துக்கள் அசாம், பர்மாவில் மிகவும் பரவலாகக் காணப்பட்டன.

சிவமயம்

சிவபூமி திருவாசக அரண்மனை
நாவற்குழி, யாழ்ப்பாணம்.
திருவாசக விழாவும், சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயில்
கும்பாபிஷேகதின நிகழ்வும்

திருவாசக விழா :- 12.07.2019 பிற்பகல் 4.00 மணி
கும்பாபிஷேக தினம் :- 13.07.2019 காலை 7.00 மணி

அன்புடையீர்!
இறையருளினாலும், அன்பர்களின் ஆசியாலும் சிவபூமி திருவாசக அரண்மனை உலகப் பிரசித்தி பெற்ற புனித நிலையமாகப் பரிணமித்து விளங்குகின்றது. கடந்த ஒருவருட காலத்தில் பல ஆயிரம் பக்தர்கள் அரண்மனைக்கு வருகைதந்து வழிபாடு செய்தமை அனைவரும் அறிந்ததே. இப்புனித அரண்மனை உருவாக்கம் பெற்று ஓராண்டு நிறைவையும், சிவதெட்சணாமூர்த்திக்கும், இங்கு பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கும் நூற்றி எட்டு சிவலிங்கத்துக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்ற ஓராண்டு பூர்த்தி வைபவத்தையும், மணிவாசகப் பெருமானையும் திருவாசகத்தையும் சிறப்பிப்பதற்காக திருவாசக விழாவையும் நடத்துவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

திருவாசக விழா
காலம் :- 12.07.2019 (வெள்ளிக்கிழமை)
நேரம் :- பிற்பகல் 4.00 மணி
தலைமை :- கலாநிதி ஆறு.திருமுருகன்

- விசேட பூசை வழிபாடு ♦மங்கள விளக்கேற்றல்
- பஞ்சபுராணம்
- ஆசியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமகந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் (முதல்வர் - நல்லை ஆதீனம்)
- வாழ்த்துரைகள் :- வைத்திய நிபுணர் வ.மனோமோகன் (ஆஸ்திரேலியா)
  பேராசிரியர் அ.சண்முகதாஸ்
  (முன்னாள் கலைப்பீடாதிபதி - யாழ்.பல்கலைக்கழகம்)
- 5.30 - 6.30 :- திருவாசகம் சிறப்பு அரங்கு
  மூத்த ஓதுவார் திருமுறைக் கலாநிதி
  திருத்தணி என். சுவாமிநாதன் அவர்கள் (இந்தியா)
- 6.30 - 7.00 :- பரதநாட்டிய அரங்கு
  "கூத்தன் இவ்வானும் குவலயமும்"
  (பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவர்கள்)
- இரவு :- 7.30 :- விருந்துபசாரம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூமி திருவாசக அரண்மனை, நிர்வாக சபை,
ஏ9 வீதி, நாவற்குழி. சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.

மரண அறிவித்தல்

கோவிந்தன் சிங்கராசா

மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரகவிப் புலவர் கோவிந்தன் அன்னம்மா ஆகியோரின் தலைமகனும் காலஞ் சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நேசரத்தினம், தவநாதன், சிறில் மகிபரத்தினம் மற்றும் மரியசஞ்சீவி, தேவ பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரி இராசமலர் (ஜேர்மனி), மேரி தேவமலர், கெனடி திருச்செல்வம் (பிரான்ஸ்) பெனடிற் அருட்செல்வம், மேரி ஜெபமலர், அமரர் டேவிற் ஞானச் செல்வம் றொபேட் தவச்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறி வரதராசா (ஜேர்மனி) அமரர் மதுரநாயகம், சுவேந்தினி (பிரான்ஸ்), ஜெயவதனி, மேரி பிறீமினி ஆகியோரின் அன்பு மாமனாரும் கிளவ்டியா (ஜேர்மனி), ஸ்ரெபான் (ஜேர்மனி), ஞானப்பிரகாஸ் (ஜேர்மனி), ஜெயப்பிரசாத், பிரதீபா, அபினேஸ் (பிரான்ஸ்), அபிலா (பிரான்ஸ்) ஆன் பிரியானா, ஆன் மீரா, ஆன்ரூஸ், ஆன்றியா, பிறின்ஸ் றொனால்டோ, ஆன்விஸ்ருதி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (09.07.2019) காலை 10.00 மணிக்கு மூளாய் புனித செபமாலை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காகச் செபமாலைமாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

தகவல் - குடும்பத்தினர்

கைபேசி - 077 216 5213

மரண அறிவித்தல்

மரியாம்பிள்ளை யேசுதாசன்



தும்பளையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி தெற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை யேசுதாசன் (ராசு) நேற்று (08.07.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை மதலைப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மருமகனும் மேரிக்கிறேஸ் கனகமணியின் அன்புக் கணவரும் அன்ரன் தேவராசா (லண்டன்), அன்ரன் றொபேட் (பிரான்ஸ்), மேரி றூபினா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்டசெயலகம், கிளிநொச்சி) அமுத சுனித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வினுசா (லண்டன்), ஷிபானா (இந்தியா), குமணன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயுசன், ஜெரோனிக்கா, சாத்மிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (09.07.2019) செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் கரவை தேவமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர் நல்லடக்கத்திற்காக கரவை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மேரிவாசா"
கரவெட்டி தெற்கு, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
077 979 0883

மரண அறிவித்தல்



வைரவன் கதிரவேலு

திக்கம்புரை வயாவிளானை பிறப்பிடமாகவும் விளையாட்டரங்கவீதி கட்டப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் கதிரவேலு நேற்று (08.07.2019) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவன் சோதி தம்பதியினரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான கணபதி இலட்சுமி தம்பதியினரின் மருமகனும் மனோன்மணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற இராசம்மா மற்றும் மகாலிங்கம், சரஸ்வதி காலஞ்சென்ற தவராசா மற்றும் ஆனந்தராசா, செல்வலிங்கம், முகிலன், ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நவநீததீசன், வனஜாதேவி, நித்தியா, விமலதீசன், யதீசன், ஆகியோரின் அன்புத்தந்தையும் வசந்தகுமார், வகீரதன், வர்ஜினி, ரூபனா ஆகியோரின் அன்பு மாமனாரும் டனிஷ்ரன், டர்சன், டிலக்ஷன், சாருஜன், லதீஜன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 354 5107
077 915 3567

தகவல்:
குடும்பத்தினர்.

9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 02 . 06 . 1966

ஆண்டவன் அடியில் 09 . 07 . 2010

அமரர் கந்தையா சிவகுமார்

அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய் வாழ்ந்து வழிகாட்டிய
எமது அன்பின் குல விளக்கே
அவனிதனில் எமை விட்டுப் பிரிந்து
ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன
ஆனால் நீர் எம் மனதைவிட்டு என்றுமே நீங்கவில்லை.

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.

சி.கந்தையா (தந்தை), க.வாமதேவி (தாய்), சகோதரர்கள், உறவினர்கள்.

5 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 26 . 09 . 1948

மறைவு 05 . 07 . 2014

இராசையா நவரத்தினராசா

திதி: அட்டமி

திரும்பிப் பார்க்கின்றோம்
காலங்கள் கரைந்து ஆண்டுகள்
கடந்தன ஐந்து நாம் மறந்தாலன்றோ
உங்களை நினைப்பதற்கு
என்றென்றும் உங்கள் நினைவாய் வாழ்கின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

என்றும் நினைவில் குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



மலர்வு 03 . 06 . 1953

உதிர்வு 07 . 07 . 2019

சத்தியதேவி சிவபாலன்

சந்தைவீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியதேவி சிவபாலன் 07.07.2019 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - கமலாம்பிகை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - யோகம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற வை.சிவபாலனின் அன்பு மனைவியும் ஜெகன், ஜெயங்கன், ஜானுயா, ஜெசிந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுசிதா, பிரேம்குமார், கவியரசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நிதுஜன், தர்மியா, அயுசன், நிதுசன், கவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தைவீதி, உடுப்பிட்டி.

(AKN 00824) (14,17)

தகவல்: குடும்பத்தினர்.

நான்காம் ஆண்டு நினைவுத்துளிகள்



மலர்வு 19 . 04 . 1973

உதிர்வு 25 . 06 . 2015

அமரர் வல்லிபுரநாதன் தீபராஜ்

(கணக்காளர் - தொழிலதிபர் - லண்டன் (ஹீலியங்டன்))

(திதி - ஆனி மாத பூர்வபக்கஅஷ்டமி - 09.07.2019)

ராஜ்

கடவுள் வரைந்த பாதையிலே
கலந்து விட்டாய், நான்கு வருடம்
கண்மூடித்திறந்தது போல்
கடுகதியாய் சென்றதுவே!
காதோரம் உன் கதைகள்
காற்றலையில் உன் காந்தச்சிரிப்பு
கண் துஞ்சாது நீ ஆற்றிய பணிகள்
காலமெல்லாம் எம் நினைவோடு!
கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்கி - உன்
ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கிறோம்!

வி. வல்லிபுரநாதன் (தந்தை) தெகிவளை

உன் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்

கண்ணீர் அஞ்சலி



ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்களான **சு.ஸ்ரீஸ்கந்தராஜா (கதிரமலை)** அவர்களின் அன்புச் சகோதரரும் **இ.தர்மலிங்கம்** அவர்களின் மைத்துனரும் ஆகிய

சுப்பிரமணியம் சசிகுமார்

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகரை வேண்டி நிற்கின்றோம்.

பரிபாலனசபையினர், ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம், உரும்பிராய்.

ஆறாவது ஆண்டு நினைவு

அமரர் கனகசபை இராசநாயகம் (சின்னையா)

மாறாத அன்புடன் மனங்களில் நீங்களாகி
மறவாமல் வாழ்ந்தோமே! மறைந்தாயோ ! எமைவிட்டு
ஆறாக ஓடுதையா! அடங்காது கண்ணீரும்
ஆறாண்டு ஆனாலும் அன்றுபோல் இன்றுமே!

சகிலாலயம் அல்வாய்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மரண அறிவித்தல்

சுப்பு மாரிமுத்து

அராலியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பு மாரிமுத்து 04.07.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பு - பாரு தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான குஞ்சர் - பொன்னு தம்பதியரின் மருமகனும், தங்கச்சியம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மகேந்திரா தேவி மற்றும் துரைசிங்கம் (பிரான்ஸ்), வசந்தி, யசிநந்தினி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் செல்வராணி (பிரான்ஸ்), இராஜரட்ணம், சேகர் (சேகர் ஆட்டோ) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.07.2019) திங்கட்கிழமை நடைபெற்றன என்பதனை அறியத்தருகின்றோம்.

(CS/26552) (11.17)

தகவல்: குடும்பத்தினர்



நூல்கள்

அப்பா எனக்கு வாங்கித் தந்தார்
அழகு நூல்கள் இரண்டு நான்
ஆசைகொண்டு கற்றுவந்தேன்
அறிவின் தாகம் கொண்டு!

எப்போதுமே எனக்கு நல்ல
இனிய நூல்கள் பிடிக்கும்
அவை எடுத்துச் சொல்லும்
கருத்துகளில்
ஏற்றம் நமக்குக் கிடைக்கும்.

நூல்கள் நமக்கு நல்ல நண்பன்
நூறுமுறையும் சொல்வேன் அதை
நேரடியாய் அனுபவிப்பேன்
நெஞ்சம் மகிழ்ச்சி கொள்வேன்.

ஆண்கள் பெண்கள் வேறுபாடு
அறிவு பெற்றால் இல்லை நம்
அத்தனைபேர் உள்ளத்திலும்
ஆனந்தமே எல்லை

நூலகத்தைத் தேடிச் சென்றால்
நுண்ணறிவு கொடுக்கும் நல்
நுழைவு வாயில் வெற்றி வாழ்வில்
நேரடியாய் கிடைக்கும்

அறிவுச் சுரங்கம் நூல்கள் கூட்டும்
அள்ளிக் கொள்ளத் தூண்டும் அதை
அடைந்து விட்டால் புகழின் உச்சி
ஆகாயமும் தாண்டும்

பொன்மொழிகள்

- என் மனம் விரும்பும் நூல்களைக் கொடுங்கள். வாழ்நாள் முழுதும் சிறையில் வாழச் சம்மதிப்பேன். - *மாஜினி*
- நான் தெரிந்துகொள்ள வேண்டியவை புத்தகங்களில் இருக்கின்றன. நான் படிக்காத நூல் ஒன்றை எனக்குத் தருபவர்களே எனக்கு மிகவும் விருப்பமானவர்கள் - *ஆபிரகாம் லிங்கன்*
- அக்கறை உள்ள பெற்றோரும், அலமாரி நிறையப் புத்தகங்களும் வாய்க்கப்பெறும் குழந்தையே அதிர்ஷ்டசாலி - *ஜான்மெக்காலே*
- ஒரு நல்ல படிப்பாளி கொஞ்சம் விஷயங்களைப் பற்றியாவது முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். பல விஷயங்களைப் பற்றி கொஞ்சமாவது தெரிந்திருக்க வேண்டும் - *மார்க்ஸ் அரேலியஸ்*
- ஒரு நூலகத்தையும், ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறெதுவும் தேவையில்லை. - *சிசரோ*
- நூலகம் இல்லாத ஊரை நான் ஒரு ஊராக மதிப்பதே இல்லை . - *மாமேதை லெனின்*
- எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில்தான் ஒளியினை எக்கு இருக்கிறது -*பிளாட்டோ.*

வீடு காணி விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கு பிரம்படி லேன் கொக்குவிலில் 2பரப்பு காணியில் அமைந்த புதிய வீடு விற்பனைக்கு உண்டு.
076 702 3565

twitter

செந்திலின்_கிறுக்கல்கள் @Annaiinpillai

ஆபீசில் இருக்கும் ஸ்லிப்பர் செல்லுக்கு கிளர்க் என்று பெயர்!

எனக்கொரு டவுட்டு @Thaadikkaran

உனை கண்டவுடன் மயக்க வர செய்கிறாயே உன் பெயரென்ன வெண் பொங்கலா..!

ஊர்க்காவலன்™ @oorkkavalaan

காய் பழுத்தா 'பழம்'..
மனிதன் பழுத்தா 'கிழம்'...

செந்திலின்_கிறுக்கல்கள் @Annaiinpillai

சொந்த மனதால் சூன்யம் வைத்து கொள்வதின் பெயர் தான் எதிர்பார்ப்பு !

கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

இங்கே 'நீதி' பற்றாக்குறை இருப்பவருக்கே.

'நீதி' பற்றாக்குறையாய் இருக்கிறது!!



புதிய தோற்றத்தில் விஜய் சேதுபதி

விஜய் சேதுபதி அடுத்ததாக 'கடைசி விவசாயி' என்ற படத்தில் நடித்து வருகிறார். அந்தப் படத்தை 'காக்கா முட்டை', 'குற்றமே தண்டனை', 'ஆண்டவன் கட்டளை' போன்ற படங்களை இயக்கிய மணிகண்டன் இயக்குகிறார்.

விவசாயம், விவசாயிகளை மையப்படுத்தி உருவாகும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதி விவசாயியாக நடிக்கிறாராம். விவசாயத்தின் அவசியத்தை உணர்த்தும் படமாக இது உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இந்தப் படத்துக்காகப் புதிய தோற்றத்தில் விஜய் சேதுபதி நடித்துள்ள ஒளிப்படம் ஒன்று வெளியாகியுள்ளது. மனநலம் பாதிக்கப்பட்ட வராக நடித்துள்ள விஜய் சேதுபதியின் இந்த தோற்றம் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.



வாழ்க்கை வாழ்வதற்கே!

மைக்கேல் ஜாக்சன் 150 ஆண்டுகள் வாழ விரும்பினார்.

தன் வீட்டில் 12 மருத்துவர்களை நியமித்தார். அவர் தினமும் முடி முதல் கால் நகங்கள் வரை பரிசோதிப்பார். உண்பதற்கு முன்பு அவரது உணவு எப்போதும் ஆய்வகத்தில் சோதிக்கப்பட்டது.

அவரது தினசரி உடற்பயிற்சி மற்றும் உடற்பயிற்சியைக் கவனிக்க மேலும் 15 பேர் நியமிக்கப்பட்டனர்.

அவரது படுக்கையில் ஆக்ஸிஜன் அளவைக் கட்டுப்படுத்தும் தொழில் நுட்பம் இருந்தது.

அவர் 150 ஆண்டுகள் வாழ வேண்டும் என்ற கனவுடன் தொடர்ந்தார்.

ஆனால், 25 ஜூன் 2009 அன்று, தனது 50 வயதில், அவரது இதயம் செயல்படுவதை நிறுத்தியது. அந்த 12 மருத்துவர்களின் நிலையான முயற்சி பயனளிக்கவில்லை.

கடந்த 25 ஆண்டுகளாக மருத்துவர்களின் ஆலோசனையின்றி ஒரு போதும் ஒரு படி கூட முன்னேறாத நபர், 150 ஆண்டுகள் வாழ வேண்டும் என்ற அவரது கனவை நிறைவேற்ற முடியவில்லை.

இப்போது சிந்திக்கலாம்.

அலங்காரிப்பாளர்கள், வடிவமைப்பாளர்கள் அல்லது பொறியாளர்களுக்காக நாம் சம்பாதிக்கிறோமா?

விலையுயர்ந்த வீடு, கார், ஆடம்பரமான திருமணத்தைக் காண்பிப்பதன் மூலம் நாம் யாரைக் கவர விரும்புகிறோம்...?

இரண்டு நாள்களுக்கு முன்பு நீங்கள் கலந்து கொண்ட திருமண வரவேற்பில் உண்ட உணவுப் பொருள்கள் உங்களுக்கு நினைவிருக்கிறதா..? நாம் ஏன் வாழ்க்கையில் ஒரு மிருகத்தைப் போல வேலை செய்கிறோம்..?

எத்தனை தலைமுறைகளை நாம் காப்பாற்ற விரும்புகிறோம்..?

வாரத்தில் உங்கள் குடும்பத்தினருடனோ அல்லது நண்பர்களுடனோ சிறிது நேரம் செலவிடுகிறீர்களா..?

நீங்கள் சம்பாதித்ததில் 5% நீங்களே செலவிடுகிறீர்களா..?

நாம் சம்பாதித்தவற்றோடு வாழ்க்கையில் ஏன் மகிழ்ச்சியைக் காணவில்லை?

உங்களுக்காக நீங்கள் சிறிது நேரம் செலவிடுங்கள். எம்மிடம் எந்தவொரு சொத்தும் இல்லை.. சில ஆவணங்களில் மட்டுமே நம் பெயர் தற்காலிகமாக எழுதப்பட்டுள்ளது.

பணக்காரனாக_இருப்பது_பாவம் அல்ல, ஆனால் பணத்தால் மட்டுமே பணக்காரனாக இருப்பது பாவம்.

வாழ்க்கையை கட்டுப்படுத்துங்கள். இல்லையெனில் வாழ்க்கை உங்களை கட்டுப்படுத்தும்.

வாழ்க்கையின் முடிவில் உண்மையில் முக்கியமான விடயங்கள் மன நிறைவு, திருப்தி மற்றும் அமைதி.

இவற்றை விலை கொடுத்து வாங்க முடியாது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

அரசியல் தீர்வு தமிழர்களுக்கு மட்டுமானதேயல்ல

முஸ்லிம்கள்உதவியின்றிதமிழர்களுக்குத்தீர்வுகிட்டாதுஎன்று எச்சரிக்கும் பாணியில் கருத்துத் தெரிவித்துள்ளார் முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச். எம்.எம்.ஹரீஸ். கல்முனைவடக்குதமிழ்உபபிரதேசசெயலகத்தை தரம் உயர்த்தும்படி வலியுறுத்தித் தமிழர்கள் போராட்டங்களையும் நடத்திவருவது தொடர்பாகவே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தி ருக்கிறார்.

கல்முனைதமிழ்உப பிரதேச செயலகம்தரம்உயர்த்தப்படும்போது கல்முனை நகரத்தின் பெரும் பகுதியும் அதற்குள் அடங்கும் என்ப தால் அதனை விட்டுக்கொடுக்க முடியாது என்பதே நாடாளுமன்ற உறுப்பினர்ஹரீஸ் தெரிவிக்கும்நிலைப்பாடு. கல்முனைநகரத்தை தமிழர்கள் விட்டுக்கொடுக்கத் தவறினால் அவர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று கிடைப்பதற்கு முஸ்லிம்களின்உதவி கிடைக்காது என் பதையே அவர் சூசகமாகத் தெரிவித்திருக்கிறார். ஒரு வகையில் கல்முனையைக் கேட்டால்உங்களுக்கு அரசியல்தீர்வு கிடைக்காது என்று தமிழர்களைப் பார்த்து மிரட்டுகிறார்.

அவர் அப்படி நடந்துகொள்வதற்குக் காரணம் இருக்கின்றது. கல் முனை மற்றும் அதனையொட்டிய பகுதி வாக்குகளை நம்பியே நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அரசியல் செய்து வருகின்றார். எனவே கல்முனை நகரத்தைப் பாதுகாப்பதற்கு தன்னை மீறிய தீவி ரத்தைஅவர்காண்பிக்கவில்லைஎனில்அவரதுஅரசியல்எதிர்காலம் கேள்விக்குள்ளாகிவிடும் என்பது நிதர்சனம்.

இந்தப்பிரச்சினைகாரணமாகவேநீண்டகாலமாகதமிழ்உபபிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படாமல் இருக்கின்றது என்று தெரிவிக்கி றார்கள் நடுநிலையான முஸ்லிம் மூத்தவர்கள். ஒவ்வொருவரும் இத்தகைய தமது குறுகிய அரசியல் நலன்களை மட்டும் முன்னிறுத்துவதே பிரச்சினைகள் வளர்வதற்கும் இனப் பிளவுகள் தீவிரமடைவதற்கும் காரணம்.

கல்முனை நகரம் தமிழ்ப் பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ் வருவதால் அது முஸ்லிம்களின் பிடியில் இருந்து நழுவி விடப்போ வதில்லை. அதன் நிர்வாக ரீதியான கட்டுப்பாடுகள் மட்டும் கல் முனை நகர சபையிடம் இருந்து தமிழ்ப் பிரதேச செயலகத்துக்கு மாற்றப்படும் என்பதைத் தவிர, அந்த நகரம் முஸ்லிம்களின் பிடியி லிருந்து மாறுவதற்கான வாய்ப்புக்கள் ஏதுமில்லை. அப்படியிருக் கும்போதும், அதனைஏற்கமறுக்கும் இத்தகைய முஸ்லிம்தலைவர் கள்தமிழர்களின்70 ஆண்டுகாலக்கோரிக்கையானஅரசியல்தீர்வை இந்த விடயத்தில் பணயம் வைப்போம் என்று மிரட்டுகின்றார்.

இந்த வகையிலான மிரட்டல் கருத்துக்கள் இனங்களுக்கு இடையி லான பிளவுகளைச் சீராக்க வழி வகுக்காது, பதிலாக அதனை இன் னும் தீவிரமாக்கவே வழி செய்யும். தமிழ் – முஸ்லிம் மக்கள் பிளவு பட்டு நிற்பது மூன்றாந் தரப்புக்கே எப்போதும் சாதகமானது. இந்த இரு தரப்புக்களும் பிரிந்தே கிடக்க வேண்டும் என்றும் அதனைப் பயன்படுத்தித் தமது நலன்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என் றுமே அவர்கள் விரும்புகிறார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் போன்றவர்களின் கருத்துக்கள் அதற்கு உதவும் வகையிலேயே உள்ளன. அத்தோடு, கல்முனை விவகாரத்தைக் கைவிடாவிட்டால் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிட்ட முஸ்லிம்கள் உதவ மாட்டார்கள் என்று நாடாளுமன்ற உறுப் பினர் ஹரீஸ் கூறுவதன் மூலம் அவர் தமிழர்களின் எதிர்காலத்தை மட்டுமல்ல முஸ்லிம்களின்எதிர்காலத்தையுமே கேள்விக்குள்ளாக் குகிறார்.

அரசியல் தீர்வு என்பது தமிழர்களுக்கு மட்டுமேயானது அல்ல. அது இந்த நாட்டில் உள்ள எல்லாச் சிறுபான்மை மக்களுக்கும் உரியது. குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கும் உரியது. தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிட்டவில்லை என்றால் முஸ்லிம்களுக்கும் அது கிட்டாது என் பதை நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் மறந்துவிட்டது வேதனைக் குரியது. ஆகமொத்தத்தில் இத்தகைய கருத்துக்கள் மூலம் தனது சொந்த மக்களின் எதிர்காலத்தையே சோதனைக்குள்ளாக்குகிறார். இது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒரு மக்கள் பிரதிநிதிக்குரிய புத்திசாதுரியமான நகர்வு அல்ல. குறுகிய அரசியல் லாபங்களைக் களைந்து தூர நோக்குப் பார்வையோடு நடப்பதற்கு மக்கள் பிரதிநி திகள் தயாராகவில்லை எனில் விளைவுகள் மிக மோசமாகும்.

வைகோ தண்டிக்கப்பட்ட விவகாரம்

தேசத் துரோகம் என்பதை மறுபரிசீலிக்க வேண்டும்

இந்தியா - தமிழகத்தின் ம.தி.மு.க கட்சியின் பொதுச் செயலர் வைகோவுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தண்டனையானது சுதந்திரச் சிந்த னை யாளர்கள் பலருக்கும் வருத்த மும் ஏமாற்றமும் அளிக்கும் ஒன்றாக மாறியிருக்கிறது. தமிழர்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும் மிகவும் குறிப் பாக, ஈழத் தமிழர்களுக்காக எந்தத் தயக்கமுமின்றிக் குரல்கொடுப்பவ ராக அவர் இருக்கிறார். அவர் தண்ட னையை எதிர்நோக்கியிருக்கும் விதம் நிச்சயமாக விவாதத்து க்குரி யது. தண்டனை அளிக்கப்பட்டவரா கவே அவர் இருக்கிறார். நீதிமன்றத்திட மிருந்து தான் எந்தக் கருணையை யும் எதிர்பார்க்கவில்லை என்றும் அதிகபட்ச தண்டனைக்குத் தயாராக இருப்பதாகவும் அவர் சிறப்பு நீதிமன்ற த்தில் கூறியதாகத் தெரிகிறது. இந்த திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 124ஏன் கீழாகக் குற்றஞ்சாட்டப்பட்டு. அதற்கெதிராகப் போராடிய நமது தலைவர்களையெல்லாம் அது நினைவூட்டுகிறது.

விசுவாசமாக நடக்காதவர்களை தண்டிக்கச் சட்டம்

தனது ஆட்சிக்கு விசுவாச மாக நடந் துகொள்ளாதவர் என்று கருதப்படு வர்களையெல்லாம் ஒடுக்க வேண் டும் என்ற நோக்கத்தில் பிரிட்டிஷ் அரசால் கொண்டுவரப்பட்ட பிரிவு 124ஏன்வரம்புக்குள்வைகோ கொண்டுவரப்பட்ட சூழலே சந்தேகத்துக்குரியதாகிறது. இந்தக் கடுமையான சட்டப் பிரிவின் கீழாகத் தான் பால கங்காதர திலகர், காந்தி போன்ற நாட்டின் மிக உயர்ந்த தலைவர்களெல் லாம் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்பட்டார்கள். தேசத் துரோகத்துக்கான சட்டப் பிரி வின் கீழ் குற்றஞ்சாட்டுவது தொடர்ந்து அதிகரித்துவரும் இன்றைய அரசியல் சூழ லில், சுதந்திரமான மக்களாட் சியுடன் ஒருங்கிணைந்த ஒரு பாகமான எதிர்க்கும் உரிமையை நடைமுறை யில் விலக்கிவைக்கும் பிரிவு 124 ஏஐ அரசியல் சாசனத் தின்படி செல்லுபடியாகும் என்று உச்ச நீதிமன்றம் கேதார்நாத் எதிர் பிஹார் மாநில அரசு வழக்கிலேயே உறுதிசெய்திருந்தாலும் அது மறுபரிசீலனைக்கு உரி யதே.

> தேசத் துரோகத்துக்கான சட்டப் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டுவது தொடர்ந்து அதிகரித்துவரும் இன்றைய அரசியல் சூழலில், சுதந்திரமான மக்களாட்சியுடன் ஒருங்கி ணைந்த ஒரு பாகமான எதிர்க் கும் உரிமையை நடைமுறையில் விலக்கிவைக்கும் பிரிவு 124 ஏஐ அரசியல் சாசனத்தின்படி செல் லுபடியாகும் என்று உச்ச நீதி மன்றம் கேதார்நாத் எதிர் பிஹார் மாநில அரசு வழக்கிலேயே உறுதிசெய்திருந்தாலும் அது மறுபரிசீலனைக்கு உரியதே.

தேசத்துரோகம் எனும் பழிவாங்கல்

காஷ்மீர் விவகாரத்தில் அரசின் அணுகுமுறை யைக் கண்டிப்பதற்காக, கண்ணையா குமார் கூட்டம் ஏற்பாடு செய்ததைத் தேசவிரோதமாகக் கருத முடியாது என்பதும், பழிவாங்கும் விதமா கவே அவர் மீது வழக்கு தொடரப்பட்டது என்பதும் அனைவருக்குமே தெரியும். அரசின் மீது அதிருப் தியை உருவாக்கும் நோக்கமில்லாமல் எதிர்ப் பைத் தெரிவிப்பதற்கான உரிமை, தேசத் துரோக மாகப் பொருள்விளக்கம் அளிக்கப்படுகிறது. அடிப்படை உரிமைகளில் ஒன்றான கருத்துரி மைக்குச் சில நியாயமான கட்டுப்பாடுகளை மட் டுமே விதிக்க முடியும். அரசின் கொள்கை முடிவு கள் சார்ந்து வைக்கப்படும் நேர்மையான விமர்ச னத்துக்கு அந்தக் கட்டுப்பாடுகள் பொருந்தாது. ஒரு ஜனநாயக நாடு, ஜனநாய கக் கருத்துகளை ஒடுக்கு வதற்காக தேசத் துரோகம் என்று அடையாளப்படுத் தும் செயல்களில் இறங் கக் கூடாது.

அயல் நாட்டுச் சிறுபான்மையின ருக்கான குரல்

வைகோ பேசியதில் தேசத் துக்கு விரோதமாக எதுவு மில்லை. பக்கத்து நாட் டில் சிறுபான்மையினராக இருக்கும் ஓர் இனத்தின் மனித உரிமைகளுக்கு ஆதரவாக ஒரு குடிமகன் தெரிவித்திருக்கும் கருத்து கள் மட்டுமே. இதற்காக ஒருவரைத் தேச விரோத வழக்கில் தண்டிக்க முடி யும் எனில், அடக்கியொ டுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்காக உல கத்தில் எந்த இயக்கமுமே இல்லாமல்போய்விடும். அந்த மக்கள் உலகத்தின் ஆதரவையும் பெற முடியாமல்போகும். இது பன்னாட்டு மனித உரிமை அறிவிப்புக்கே எதிராக முடியும். உலகத் தின் வேறு எந்தப் பகுதியிலாவது விடுதலைப் போராட்டத்துக்கான குரல்கள் எழும்போது பத்திரி கைகளோ அல்லது தனிநபர்களோ முன்வைக்கும் நியாயமான விமர்சனங்களை இப்படி அடக்க முற்படுவது கனவாகத்தான் இருக்கும். இந்த விவ காரம் உச்ச நீதிமன்ற த்துக்குக் கொண்டுசெல்லப் பட்டு, முழு அமர்வும் கூடி, அரசமைப்புச் சட்டத்தின் படி காலம்தோறும் வளர்ந்துகொண்டிருக்கும் இந்த அடிப்படை உரிமைகள் குறித்து முடிவெடுக்க வேண்டிய நேரமிது.

நன்றி – தி ஹிந்து

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

உதயன்

செய்திகள்

செவ்வாய்க்கிழமை 09 ஜூலை 2019

09

மனல் அகழ்வை தடுத்து நிறுத்துக

யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு மணற்காடு மக்கள் அவசர கடிதம்

வடமராட்சி, ஜூலை 9

வடமராட்சி கிழக்கு, மணற்காடு கிராமத்தைப் பெரும் இடரில் இருந்து பாதுகாக்கும் பொருட்டும் எதிர்கால சந்ததியின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் நோக்கிலும் இங்கு இடம்பெறும் மண் அகழ்வு நடவடிக்கைகளை உடன் தடைசெய்யுங்கள்.

இவ்வாறு வலியுறுத்தி யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர் மணற் காடு கிராம மக்கள்.

நேற்றுமுன்தினம் "பெரும் இடர்களில் இருந்து கிராமத்தைப் பாதுகாத்தல்" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மணற்காடு கிராமம் பல மணல் மேடுகளால் சூழப்பட்டிருந்தது. மணல் பெருக்கத்தால் கிராமத்தின் ஆலயம், குடிசைகள் என்பன மணலால் மூடப்பட்டன. இதனைத் தடுக்கும் முகமாக 1970ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் பா.துரைரத்தினத்தால் சவுக்கங்கன்றுகள், சஞ்சீவி மரங்கள் என்பன நடப்பட்டன. இதன் காரணமாக காலப்போக்கில் கிராமத்தைச் சூழவுள்ள பகுதிகளில் மண் நகர்வின் தாக்கம் மட்டுப்படுத்தப் பட்டது.

இந்தக் காலப் பகுதியில் வரையறையின்றி மணல் அகழ்வுகளும் மேற் கொள்ளப்பட்டன. இதன் காரணமாக மணல் மேடுகள் அழிவடைந்தன. 2004ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆழிப் பேரலை (சுனாமி) இடரால் இந்தக் கிராமம் முற்றாக அழிவடைந்ததுடன் 72 உயிர்களும் காவுகொள்ளப்பட்டன. இதற்குப் பிரதான காரணம் இந்தக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட மண் அகழ்வே ஆகும்.

சுனாமிக்குப் பின்னராக அமைக்கப் பட்ட குடியிருப்புகளும் கடல் மட்டத்திலிருந்து 5 அடி பள்ளத்திலேயே உள்ளன. மழை காலங்களில் வீடுகளில் மழை வெள்ளம் புகுந்து மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்குகின்றது. தொடர்ந்தும் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப் படுமாயின் எதிர்வரும் காலங்களில் பெரும் இடர்களை எதிர்நோக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

இந்தக் கிராமத்தைப் பெரும் இடர்களில் இருந்து பாதுகாக்கும் பொருட்டும் எதிர் கால சந்ததியின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் நோக்கிலும் இந்த விண்ணப் பத்தைப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் சமூக அக்கறையுள்ள ஆன்மீகத் தலைவர்களுக்கும் விடுப்பதோடு எமது கிராம மக்களின் அவசர வேண்டுதலைப் பதிவு செய்து மண் அகழ்வு நடவடிக்கைகளை உடன் தடை செய்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்" என்றுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர், வடக்கு மாகாண ஆளுநர், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர், வன ஜீவராசிகள் திணைக்களத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர், யாழ்.மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை, மணற்காடு கிராமசேவையாளர், யாழ். மறைமாவட்ட ஆயர், மணற்காடு பங்குத்தந்தை மற்றும் பருத்தித்துறை மறைக்கோட்ட குரு முதல்வர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (எ-173)

அதிபரை இடம்மாற்றாதீர்கள்: பாடசாலை முன் கவனவீர்ப்பு

மன்னார், ஜூலை 9

மன்னார் சாந்திபுரம் அரச தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திடீரென்று இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் பாடசாலை முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய சாந்திபுரம், ஜீவநகர், ஜிம்ரோன் நகர் கிராம மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபரின் இடமாற்றம்தொடர்பாகதங்களுக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் பாடசாலை நலன் புரிச்சங்க உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் தங்களிடம் எந்த ஒரு கருத்துக்களையும் கேட்காது இடம் மாற்றம் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதேநேரம் நேற்றையதினம் பாடசாலைப் பொறுப்புக்களை ஒப்படைத்து மாற்றம் பெற்றுச் செல்ல வருகை தந்த அதிபரை பெற்றோர்கள் பாடசாலை வளாகத்தினுள் செல்ல அனுமதிக்கவில்லை.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர சபை உறுப்பினர்கள் மக்களிடம் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தனர்.

இடமாற்றம் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உட்பட பாடசாலை நலன் புரிச்சங்கத்தினருடன்கலந்து பேசி ஆலோசனைகள் பெற்ற பின் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், குறித்த அதிபரை மீள நியமிக்கும் வரை தங்கள் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று பெற்றோர் தெரிவித்தனர்.

(கு-56)

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

கச்சாய் ம.வி. கண்காட்சி

கொடிகாமம், ஜூலை 9

தென்மராட்சி கச்சாய் மகா வித்தியாலய கற்றல் வள நிலைய கண்காட்சி நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு பாடசாலை கற்றல் வள நிலையத்தில் அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூல் நிலைய நூலகர் திருமதி ரதிக்கா கோவர்த்தன் கலந்து சிறப்பித்தார். இதில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

(த-159)

சிங்கள இராச்சியம் உருவானால் தமிழ் இராச்சியமும் உருவாகும்

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

இலங்கையில் மீண்டும் சிங்கள இராச்சியத்தை நிறுவ வேண்டும் என கண்டியில் பெரும் எடுப்பில் மாநாடு கூட்டிப் பொது பல சேனா அழைப்பு விடுத்துள் ளது. இலங்கைத் தீவில் சிங்கள இராச்சியம் உருவாக்கப்படுவதானால் கூடவே தமிழ் இராச்சியம் ஒன்றும் உருவாகும் என் பதை சிங்கள பேரினவாத சக்திகளுக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லி வைக்கவிரும்புகின்றோம். இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த இயக்கத்தின் செயலர் நாயகம் ந.சிறிகாந்தா அனுப்பியுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

இஸ்லாமிய அடிப்படைவாதச் சவால்களுக்கு எதிரான இயக்கம் ஒன்றை முன்னெடுக்கும் சாக்கில் கலப்படமற்ற சிங்கள பௌத்த பேரினவாதம் விஸ்வரூபம் எடுக்க முயற்சிக்கின்றது.

1956இல் முன்வைக்கப்பட்டசிங்கள இராச்சிய வெறிக் கூச்சல்தான், 30 வருட கால உள்நாட்டு போரில் இறுதியில் அடிகோலியது என்பதனை மறந்து, மீண்டும் பேரினவாதம் அரசியல் அரங்கை ஆக்கிரமிக்க துடித்து நிற்கின்றது.

இலங்கைத் தீவில் இன மதசமத்துவத்துக்கு இடமில்லை என்பதை இந்தப் பேரினவாத ஆதிக்க சக்திகள் பிரகடனப்படுத்தியுள்ளன.

இந்த சந்தர்ப்பத்தில் கல்முனைப் பிரதேச செயலகப் பிரச்சினையில் பௌத்த சிங்களமத வெறிச் சக்திகளின் தலையீட்டை இருகரம் நீட்டி வரவேற்ற சில தமிழ் அரசியல்வாதிகளும் ஒரு சில சமூக அமைப்புக்களும் இப்பொழுது என்ன செய்யப் போகின்றார்கள்? - என்றார்.

(எ)

ஞானசாரரின் கருத்து தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை என்ன?

தமிழ்த் தேசிய பணிக்குழுவின் தலைவர் கேள்வியெழுப்புகிறார்

கொழும்பு, ஜூலை 9

ஞானசாரரின் அறிவிப்பை சட்டமும் ஒழுங்கும் நீதியும் எவ்வாறு கையாளப்போகின்றன. 'சிங்களராஜ்ய' என்ற ஞானசாரரின் அறிவிப்பு இன்றைய பல்லினம், பல்மதம் கொண்ட ஒன்றுபட்ட இலங்கை அரசைச் சிதைக்கும் சதி கொண்ட கலவர முயற்சி. ஞானசாரரின் அறிவிப்பை இலங்கையின் சட்டமும் ,ஒழுங்கும், நீதியும் எவ்வாறு கையாளப்போகின்றன. இதை சமஉரிமைகொண்ட பச்சை தமிழினம் இலங்கையராக எதிர்பார்த்து நிற்கின்றது.

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், தமிழ்த் தேசிய பணிக்குழுவின் தலைவரும் மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன்.

இது பற்றி அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சிங்களராஜ்ய அறிவிப்பு ஏற்றுக்கொள்ளக் கூடியது என்றால் பல தமிழ் ராஜ்யங்கள் பற்றிப் பேசமுடியும்.

1815க்கு முன்னான சிங்களராஜ்யம் பற்றிய ஞானசாரரின் அறிவிப்பு 1811



இலான யாழ்ப்பாண ராஜ்யத்தையும் வன்னி ராஜ்யத்தையும் நினைவூட்டும். ஞானசாரரின் அறிவிப்பு ஒரு பிரிவினைவாதம். சிங்கள ராஜ்யம் பற்றிய ஞானசாரரின் அறிவிப்பு இன்றைய பல்லினம், பல்மதம் கொண்ட ஒன்றுபட்ட இலங்கை அரசைச் சிதைக்கும் சதி கொண்ட கலவர முயற்சி.

ஞானசாரரின் அறிவிப்பை நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நீதியும் எவ்விதம் கையாளப் போகின்றது என்பது முக்கியமானது. பிரிவினைவாதமாகவும் பார்க்கமுடியும் என்றுள்ளது.

(த)

குடமுழுக்கு

முல்லைத்தீவு,ஜூலை 9

முல்லைத்தீவு மல்லாவி யோகபுரம் மத்தி அருள்மிகு சிறி ஆலடி பிள்ளையார் ஆலய குடமுழுக்கு நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 8.40 மணி தொடக்கம் 10.28 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 15 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

தமிழர் உரிமைப் போராட்டத்தை மைத்திரி அவமதிப்பது தவறுதான்

மஸ்தான் எம்.பி கூறுகிறார்

வவுனியா, ஜூலை 9

தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தை அரசதலைவரே கொச்சைப்படுத்தினாலும் அதனை ஏற்றுக்கொள்ளமுடியாது, தவறுதான் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. கே. மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு கொல்லர் புளியங்குளத்தில் நேற்றுமுன்தினம் நடந்த மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனது நிதியொதுக்கீட்டில் நடைபெற்ற வேலைத்திட்டங்களுக்கு வேலை முடிந்தபின்னரும் அதற்கான பணத்தை வழங்காமலுள்ளதாக அறிகின்றேன். இந்த நிலையில்தான் இந்த ஐ.தே.க அரசு இருக்கின்றது. ஏனெனில் எந்தச் செயற்பாட்டையும் அரசியல் ரீதியாக பார்ப்பதே இதற்குக் காரணமாக இருக்கின்றது.

நாடு எக்கேடு கெட்டுப்போனாலும் உலக நாடுகளின் கொள்கைகளுக்கும் செயற்றிட்டங்களுக்கும் செயற்படுபவர்களாகவே அவர்கள் இருக்கின்றனர். அதற்கு நாங்கள் இடம்கொடுக்க முடியாது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் வல்லரசு நாடுகளின் எடுபிடிகளாக வடக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

நான் நிதி ஒதுக்கியிருந்தாலும் அதனை எடுக்கமுடியாதுள்ளது. அதற்கு அமைச்சரொருவர் தடையாக இருந்துள்ளார். இன்று அந்த அமைச்சரே பிரச்சினைக்குள்ளாகியுள்ளார். ஆகவே என்னால் ஒதுக்கப்பட்ட நிதிகள் கிடைக்காத பட்சத்தில் பிரதேச செயலரிடம் கேளுங்கள் - என்றார். (த)

உருத்திரபுரம் உள் வீதி சீரமைப்பு ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை 9

கிளிநொச்சி உருத்திரபுரம் கிழக்கில் அமைந்துள்ள 4ஆம் குறுக்கு வீதி 7.2 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கும் பணிகள் கடந்த 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாகக் குறித்த வீதி சீரமைப்பின்றிக் காணப்பட்டது. வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர் சிவஞானசோதியை அங்கு அழைத்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வீதியின் நிலையை விளக்கி அதனைச் சீரமைக்குமாறு கோரியிருந்தார்.

அதனடிப்படையில் 7.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு சீரமைப்பு வேலைகள் கரைச்சி பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அந்தப்பகுதி மக்களுடன் உருத்திரபுரம் வட்டார உறுப்பினர் கணேசலிங்கம், தவிசாளர் அ. வேழமாலிகிதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-222)

விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

வவுனியா, ஜூலை 9

வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பெரிய மடுகிராம இளம்பறவை விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அவற்றை வழங்கினார்.

வழங்கும் நிகழ்வில் வவுனியா நகரசபை உபதலைவர் குமாரசுவாமி, வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பார்த்தீபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (த)

முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 9

யாழ்ப்பாணம் மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய பாலர் முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நிலையத் தலைவர் இ.ஜனதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், திருமதி. சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-159)

கணவனை இழந்த குடும்பத்துக்கு தச்சுப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 9

போரில் குடும்பத் தலைவரை இழந்த பெண்ணுக்கும் அவரது ஒரு மகனுக்குமான வாழ்வாதாரமாக 85 ஆயிரம் ரூபா பெறுமதியில் தச்சுப் பட்டறை அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சங்கரத்தையைச் சேர்ந்த சிவநேசன் சிவகலை என்பவருக்கே அது வழங்கப்பட்டது.

அவரின் கோரிக்கைக்கு அமைய கனடாவிலுள்ள புன்னகை அமைப்பு இதை அமைத்துக் கொடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-222)

கமநலசேவைகள் நிலையத்தில் வயற்காணிகளைப் பதிவிடவும்

கிளிநொச்சி, ஜூலை 9

கிளிநொச்சி பெரியபரந்தன் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட வயற்காணி உரிமையாளர்கள் வயற்காணி பதிவு இடாப்பில் பதிவு செய்து உரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு பெரியபரந்தன் கமக்கார அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

பெரியபரந்தன் கமக்கார அமைப்புக்குட்பட்ட டி5டிஎல்.பி.1, டி6, டி7 ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வயற்காணிகளைக் கிளிநொச்சி கமநலசேவைகள்நிலையத்தின், நெற்காணி பதிவு இடாப்பில் பதிவு செய்து உரிய பற்று சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெரியபரந்தன் கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயக் காணிகள் கிளிநொச்சி கமநல சேவைகள் நிலையத்தால் ஏற்கனவே அளவீடு செய்யப்பட்டுள்ளன.

இன்றும் நாளைமறுதினமும் அதற்கு அடுத்த நாளும் மாத்திரமே பெரியபரந்தன் கமக்கார அமைப்பில் வைத்துப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. எனவே கமநல சேவைகள் நிலையத்தின் பதிவு இடாப்பிற் பதிவுசெய்து அதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு பெரியபரந்தன் கமக்கார அமைப்பின் தலைவர் சு.ஜதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார். (த-426)

தொலைதூரத்திலிருந்து நீராவியடிக்கு வந்தனர்

ஏற்பாட்டுக்குழு தெரிவிக்கிறது

கிளிநொச்சி, ஜூலை 9

முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் கோவில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக தமிழர்களின் பலத்தை காண்பிக்க தொலை தூரங்களிலிருந்து ஏராளமானோர் திரண்டு வந்திருந்தனர். உரிமையை எடுத்துக்காட்டியிருந்தனர். அவர்களுக்கு நன்றி கூறுவதாக ஏற்பாட்டுக்கு குழுவினர் தெரிவித்தனர்.

இது பற்றி அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர்.

பௌத்த மயமாக்கலால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் முல்லைத்தீவு பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த திருவிழாவும் 108 பானைப் பொங்கலும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் வடக்கு, கிழக்கிலிருந்து மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

பௌத்த மயமாக்கலால் அழித்தொழிக்கப்படும் நிலையில் இருக்கும் பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயம் எமது தொன்மை, நீராவியடி மண் எமது சொந்த மண் என்பதையும் ஆக்கிரமிப்பாளர்களுக்குக் காண்பிக்கும் நோக்கத்துடன் நல்லுள்ளங்களின் நிதி உதவியையும் பெற்று 108 பானைப் பொங்கலை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறோம் - என்றுள்ளது. (த)

தையல் பயிற்சியை நிறைவுசெய்த 115 மாணவருக்குச் சான்றிதழ்கள்

கிளிநொச்சி, ஜூலை 9

கிளிநொச்சி கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் அனுசரணையில் லிட்டில் எய்ட் இலவச திறன் விருத்தி நிலையத்தில் கணினி மற்றும் தையல் பயிற்சிகளை நிறைவு செய்த 115 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் கேட்போர் கூடத்தில் கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய அதிபர் அ. பங்கையற்செல்வன் தலைமையில் இது நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரும், யாழ்ப்பாணப் போதான மருத்துவமனைப் பணிப்பாளருமான த. சத்தியமூர்த்தி மதிப்புறு விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார் மற்றும் லிட்டில் எய்ட் நிறுவனத் தலைவர், கிளிநொச்சி சின்மியா மிசன் சுவாமிகள், கருணா நிலைய பொறுப்பு பங்குத்தந்தை, அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு இலவச திறன் விருத்திக் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும் திறமைச் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பதக்கங்களும் வழங்கினர். (த-222)

மாணிக்கவாசகர் குரு பூசை

யாழ்ப்பாணம், ஜூலை 9
புதுக்குடியிருப்பு பிரதேச இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில், மாணிக்கவாசகர் குரு பூசை தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடை பெற்றன.
இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில், சமயக் குர வர்களில் ஒருவரான மாணிக்கவாசகரின் குரு பூசை தினமானது முல்லைத்தீவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.
முல்லைத்தீவு விசுவமடு, வள்ளுவர் புரம் சிறி முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில், இந்துமாமன்ற தலைவர் தி.அமிர்தலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.
வள்ளுவர்புரம், சிறி முத்துமாரி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடுகளுடன் நிகழ்வு கள் ஆரம்பமாகி தொடர்ந்து விருந்தினர் வரவேற்பு, மங்கல விளக்கேற்றல் என்பன இடம்பெற்றன.
நிகழ்வில் மாணிக்கவாசகர் தொடர்பான செற்பொழிவுகள், கலை நிகழ்வுகள், விருந்தி னர்களது உரைகள்.போட்டி நிகழ்வுக்கான பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன.
நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்த ராசா, வடக்குமாகாணசபைமுன்னாள்உறுப்பி னர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்புப் பிதேசசபை உறுப்பினர்களான ச.திருச்செல் வம், ந.கேதினி ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஜ-7,222)

விபுலானந்தக் கல்லூரியில் புலமைப்பரிசில் கருத்தரங்கு

வவுனியா, ஜூலை 9
வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தக் கல்லூரியில் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.
பாடசாலை பழைய மாணவர் அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் கா.பொ.த சாதாரண தர மாணவர்கள் (1995) மற்றும் கா.பொ.த உயர்தர பழைய மாணவர்களின் (1998) நிதி பங்களிப்புடன் கருத்தரங்கு நடைபெற்றது.
இந்தக் கருத்தரங்கில் 100க்கும் மேற்பட்ட தரம்5 மாணவர்கள் கலந்து கொண்டு பயன டைந்திருந்தனர். விருந்தினர்களாக கல்லூரி யின் அதிபர் சிவநாதன், கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் சசிதரன், வவுனியா சைவப்பிரகாச மகளிர் ஆரம்ப பிரிவின் அதிபர் தியாகசோதி, வெளிச் சம் அறக்கட்டளையின் தலைவர் லம்போத ரன், செயலர் கார்த்தீபன், பாடசாலை அபிவி ருத்திச் சங்க உறுப்பினர் தர்சன், பாடசாலை யின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த-222)

'நாமே போட்டோம் நாமே சேகரிப்போம்'

சுற்றாடலைப் பாதுகாக்க விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஜூலை 9
'நாமே போட்டோம் நாமே சேகரிப்போம்' எனும் தொனிப்பொருளில் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்றிட்டம் கிளிநொச்சி மகா வித்தியாலய சாரண மாணவர்களால் நேற்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மகா வித்தியாலய சாரண மாணவர்களின் இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்கள் மத்தியில் சுற்றாடல்தொடர்பானவிழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பாடசாலை வளாகம் மற்றும் கிளிநொச்சி நகரின் ஏ9 வீதியின் டிப்போ சந்திதொடக்கம்கரடிப்போக்குச் சந்தி வரையாக இரு மருங்கி லும் உள்ள உக்காத பொருள் கள் சேகரிக்கப்பட்டு பாதுகாப் பான முறையில் அகற்றப்பட் டன. சுமார் ஒரு மணிநேரம் குறித்த செயற்றிட்டம் பாட சாலை மாணவர்களால் முன் னெடுக்கப்பட்டது.
சுற்றாடல் பாதுகாப்பு, பொலித் தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவ னைகளை கட்டுப்படுத்துவதற் காக அரசதலைவரின் ஆலோ சனைக்கமைவாக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கிளிநொச்சி மகா வித்தியாலய சாரணிய மாண வர்கள் மற்றும் பெண் சாரணி யர்கள் 120 பேரின் பங்களிப்பு டன் இந்தச் செயற்றிட்டம் முன் னெடுக்கப்பட்டது. சாரண மாணவர்களின் இந்தச் செயற் பாடு தொடர்பில் புத்திஜீவிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டுக்கள் தெரிவித்துள்ள னர். (த-35)

நாடகப்போட்டியில் ஸ்கந்தவரோதய முதலிடம்

சுன்னாகம், ஜூலை 9
மாகாணமட்ட தமிழ்த்தின நாடகப்போட்டியில் ஸ்கந் தவரோதயக்கல்லூரி முத லிடம் பெற்றுள்ளது.
மாகாணமட்ட தமிழ்த்தின நாடகப்போட்டி யாழ்ப்பா ணம் வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று முன் தினம் நடைபெற்றது.
வடக்கு மாகாணத்தின் 9 கல்வி வலயங்களைப் பிர திநிதித்து வப்படுத்திய 9 பாடசாலை நாடக அணிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றின.
இந்தப் போட்டியில் வலிகாமம் கல்வி வல யத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்கந்தவரோத யக் கல்லூரி 'உயிர்ப்பலி' என்னும் நாடகத்தை



அரங்கேற்றி முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டது.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் தேசியமட்டத்தில் தொடர்ச் சியாக மூன்று தடவைகள் முதலிடத்தைப் பெற் றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

பன்னாட்டு கூட்டுறவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபையின் ஏற்பாட்டில் பன்னாட்டு கூட் டுறவு தின நிகழ்வு கடந்த சனிக்கி ழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.
யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர்.தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பிரதிநிதியாக கலந்து கொண்ட தி. வித்த ககலாநிதி கூட்டுறவு ஆரம்ப நிகழ்வில் பலூன் களை பறக்கவிட்டு கூட்டுறவு மாதத்தை ஆரம்பித்து வைத்தார்.
நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட கூட் டுறவு நிறுவனங்களின் பணிப்பாளர் கள், பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-63)

சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற பேருந்து விபத்தில் ஒருவர் காயம்

வவுனியா, ஜூலை 9
வவுனியா ஈரப்பெரியகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்கு ணாமடுப்பகுதியில் நேற்று அதி காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித் தனர்.
கொழும்பிலிருந்து சுற்றுலாப் பயணிகளை யாழ்ப்பாணத் துக்கு அழைத்துச் சென்ற சொகுசு பேருந்து நேற்று அதி காலை 12.30அளவில் வீதியை விட்டு விலகி அருகிலுள்ள மின் கம்பத்துடன் மோதி விபத்து க

குள்ளானது.
பயணி ஒருவருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. சாரதிக்கு ஏற் பட்ட நித்திரை காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்க லாம் என்று தெரிவிக்கப்பட்டது. போக்குவரத்துப் பொலிஸார் விசாரணை நடத்தினர். (த)

இளைஞனை மக்கள் நையப்புடைத்தனர்

உடம்பின் பகுதியை திறந்துகாட்டினாரா?

அம்பாறை, ஜூலை 9
வீதியால் சென்ற இரு பெண்களுக்கு தனது உடம்பின் ஒரு பகுதியைத் திறந்து காட்டினார் என்ற குற்றச்சாட்டி இளைஞனை நையப்புடைத்த பொது மக்கள் பின்னர் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைத்தனர்.
இந்தச் சம்பவம் கல்முனையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற் றுள்ளது.
பாண்டிருப்பு கல்முனை எல்லை வீதி யில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சாய்ந்தமருது பகுதி 170 ஒஸ்மான் வீதியைச் சேர்ந்த 21வயதுடையவரே நையப்புடைக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் கல்முனை பொலிஸ் நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். காய மடைந்திருந்ததால் அந்த இளை ஞன் மருத்துவமனையில் சேர்க்கப்பட் டார்.
அவர் தனியார் நிறுவனம் ஒன்றில் பாரவூர்தி உதவியாளர் என்றும் விசா ரணை நடக்கிறது என்றும் கல்முனை பொலிஸார் தெரிவித்தனர். (த)

மன்னார் தொங்குபாலத்தில் பயணிப்பவர்கள் அச்சத்தில்!

விரைவில் சீரமைக்கக் கோரிக்கை

வவுனியா, ஜூலை 9

மன்னார் குஞ்சுக்குளம் தொங்கு பாலம் நீண்டகாலமாகச் சீரமைப்புச் செய்யப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றது. அதனால் அந்தப் பாலத்தில் பயணிப்பவர்கள் அச்சநிலையை எதிர்கொள்கின்றனர் என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. எனவே இதனை விரைவில் சீரமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

மன்னார் குஞ்சுக்குளத்தில் பிரித்தானியரால் கட்டப்பட்ட தொங்குபாலம் பல வருடங்கள் வரலாற்றைக் கொண்டுள்ளது. மன்னாரிலுள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் செல்லும் தமிழ், சிங்கள, முஸ்லிம் சுற்றுலாப் பயணிகள் தத்தம் குடும்பத்தினருடன் தொங்குபாலத்துக்குச் சென்று அங்குள்ள இயற்கை அழகுகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

தொங்குபாலத்தில் நடைபாதையில் அமைக்கப்பட்ட தகட்டின் ஒரு பகுதி திறந்துகாணப்படுகின்றது. இதனால் அந்தப் பாலத்தைக் கடந்து செல்லும் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் பாலத்தில் அச்சத்துடன் பயணிக்கின்றனர். அங்கு பாதுகாவலர்கள் இல்லை.

விடுமுறை தினங்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் குறித்த பாலத்துக்குச் செல்கின்றனர்.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்கினேஸ்வரன் வடக்கு மாகாண சுற்றுலாத்துறை அமைச்சாராகவும் கடமையாற்றிய போது அங்கு ஒரு விடுதி அமைக்கப்பட்டுள்ளதே தவிர எந்த விதமான சீரமைப்பும் இல்லை.

வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லும் மாணவர்கள் இத்தகைய இடங்களைப் பார்வையிடுவதால் இத்தகைய சுற்றுலாத் தளங்களைச் சீரமைத்து வைத்திருத்தல் மிக அவசியமானது. சீரமைப்பது இவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகளின் கடமை.

தற்போது அந்தப் பகுதி பாதுகாப்பற்றதாகவே காணப்படுகின்றது. அங்கு பாதுகாப்பு ஊழியர்கள் இன்றி மக்களுக்குப் பாதுகாப்பு ஆலோசனைகள், அபாய நிலைமைகள் தெரியப்படுத்தப்படவில்லை. இதனால் தொங்குபாலத்தில் பயணிப்பவர்களுக்கு மேலும் அச்சம் ஏற்பட்டுள்ளது. பாலத்துக்குக் கீழ் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது.

ஆற்றைக்கடந்து செல்லும்போது பாதுகாப்பு வேலிகள் பாதுகாப்பானதாகவும் இல்லை. அற்றில் முதலைகளும் காணப்படுகின்றன.



இவ்வாறு அழிந்து செல்லும் சுற்றுலா மையங்களை அழகுபடுத்தி மாகாணத்தை வருமானம் பெறும் துறையாக மாற்றி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இது குறித்து வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகிறது.

(த)

பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

கொடிகாமம், ஜூலை 9

யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணி மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் நேற்றுமுன்தினம் அதிபர் ப. செல்வவிநாயகம் தலைமையில் நடைபெற்றன.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக கல்லூரி அதிபர் ப. செல்வவிநாயகம், உபதலைவராக கல்லூரியின் உப அதிபர் க.உமாபாலன், செயலராக பழைய மாணவரும் சுகாதாரத்திணைக்களத்தின் அபிவிருத்தி அலுவலகருமான க.கேதீஸ்வரன், உபசெயலராக பழையமாணவரும்ஆங்கிலத்துறை ஆசிரியருமானச. முகுந்தன், பொருளாளராகபழையமாணவரும் சமூக விஞ்ஞானத் துறை ஆசிரியருமான மு. பிரகலாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை போசகர்களாக பழைய மாணவர்களான ஓய்வு பெற்ற அதிபரும், முன்னாள் பிரதேச சபை தவிசாளருமாகிய சி. துரைராசா, ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் பாலசுப்ரமணியம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறை பேராசிரியர் செ. சந்திரசேகரம் ஆகியொருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக உதயவேல்முருகன், சுதாகரன், ஜெய்சங்கர், இ. நிறஞ்சன், முதலிக்குட்டி, ச. சியாமளன், ராஜ்மோகன், மோகனா, பிரபாலினி, நவனீதா, ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஜ-159)

பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாண பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் இணைந்து பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியம் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன.

இதுதொடர்பில் பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியத்தின் இணைப்பாளர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாடசாலையிலுள்ளபழைய மாணவர் சங்கங்கள்தொடர்பாக யாழ்ப்பாணம் வலயக்கல்விப்பணிப்பாளரால் கடந்த மே மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையால் பழைய மாணவர் சங்கங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொள்ளும் வழிவகைகளை ஆராயவும், எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடவும் வடக்கு மாகாணத்தில் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் பிரதானிகள் நேற்றுமுன்தினம் ஒன்றுகூடினர்.

பழைய மாணவர் சங்கங்களின் தனித்துவத்தையும், சுயாதீனமாக இயங்குதன்மையை உறுதிப்படுத்துவதற்கும், மேற்படிச் சுற்றறிக்கை போன்ற சவால்களை எதிர்கொள்வதற்கும் வடக்கு மாகாணம் தழுவியரீதியில் "பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றியம்" இக்கலந்துரையாடலின் இறுதியில் உருவாக்கப்பட்டது.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் மேற்படிச் சுற்றறிக்கையால் சங்கங்கள் சுயாதீனமாக வங்கிக் கணக்குகளை கையாள்வதை சில வங்கிகள் தடுத்துள்ளமை, வங்கிக்கும் சங்கங்களுக்கும் இடையிலான சட்டரீதியான இணக்கப்பாட்டிற்கு முரணாகவும், வழமையான நிதி நடைமுறைகளுக்கு மாறாகவும் அமைந்துள்ளமை சுட்டிக் காட்டப்பட்டதோடு, இந்த நிலைக்கு எதிராக வங்கிகளை சட்டநிபுணர்களின் உதவியோடு சட்டரீதியாக கேள்விக்குள்ளாக்குவது என தீர்மானிக்கப்பட்டது என்றுள்ளது.

(ஜ-21)

மாணிக்கவாசகர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஜூலை 9

யாழ்ப்பாணம் கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் மாணிக்கவாசகர் குருபூசை தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற இந்து கலாசார அமைச்சும், இந்து மாமன்றமும் இணைந்து

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

நிகழ்வில்

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்தத்துறை விரிவுரையாளர் திருச் செல்வம் செல்வமனோகரன் கலந்து கொள்ள உள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் சைவநெறி, இந்துநாகரிக பாட ஆசிரியர் ஆலோசகர் வே.கமலேஸ்வரன், மதிப்புறு விருந்தினராக பழைய மாணவன் கனகசபாபதி விஜயதேவா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஜ-222)

வெங்காயக் கொட்டகை அமைக்க விவசாயிகளுக்கு மானியம்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

பருத்தித்துறை வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட விவசாயிகள் 33 பேருக்கு வெங்காயக் கொட்டகைகளுக்கான மானியம் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் செயலகத்தால் நடைமுறைபடுத்தப்படும் "தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டம்" மூலமாக இந்த மானியம் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ஆழ்வார்ப் பிள்ளை சிறி தலைமையில் இடம்பெற்றது.நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மானியங்களுக்கான காசோலையை வழங்கி வைத்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஜெயக்குமார், செயலக அலுவலர்கள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் பாலரமேஸ், பருத்தித்துறை தொகுதி இணைப்பாளர் செல்வதீசன், உடுப்பிட்டி தொகுதி இணைப்பாளர் இனியவன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உணவு உற்பத்தி செயற்திட்டத்தின் மூலம் 157 பேருக்கு இதுவரை வெங்காய கொட்டில்களுக்கான மானிய காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-159)

தாக்குதலில் காயமடைந்த தாயார் மருத்துவமனையில்

கொடிகாமம் ஜூலை 8

தாக்குதலில்காயமடைந்த தயார் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.மகனால் தாக்கப்பட்டதில் காயமடைந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் கற்குழி சாவகச்சேரி பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அதே இடத்தை சேர்ந்த 74 வயதுடைய தாயாரே காயமடைந்தார்.

தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஜ-159,9)

சிறப்புத்தேவையுடையோர் 30 பேருக்கு வடஜோதி விருது

யாழ்ப்பாணம்,ஜூலை 9

பல்வேறு சாதனைகளை மேற்கொண்டு வரும் சிறப்புத்தேவையுடையோர் 30பேர் உட்பட 150 பெண்களுக்கு வடஜோதி என்னும் விருதுகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் உடுவில் குபேரகா கலை மன்றத்தினர் வடமாகாணத்தில் பலதுறைகளிலும் சாதனைகளை மேற்கொண்டுவரும் பெண் சாதனையாளர்களை மதிப்பளித்து விருது வழங்கும் நிகழ்வினை அண்மையில் நடத்தினர்.

நிகழ்வில் முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், பிரம்மகுமாரி ரஞ்சி ஆகியோர் வடபுல பெண் சாதனையாளர்களுக்கான விருதுகளை வழங்கியிருந்தனர்.

(ஜ-9)

டோனியின் பிறந்தநாள்; யாழில் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
இந்திய துடுப்பாட்ட அணியின் முன்னாள் தலைவர் மகேந்திரசிங் டோனியின் 38ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.
யாழ்ப்பாணம் டோனி ரசிகர் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் குருதிக்கொடை முகாம் காலை இடம்பெற்றது. தொடர்ந்து மதியம் கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கி பிறந்த தினத்தை கொண்டாடி மகிழ்ந்தனர். (ஜாபி)

135 ஆவது பிறந்தநாளும் பரிசளிப்பு நிகழ்வும்

கொடிகாமம், ஜூலை 9
இந்துபோர்ட் சு.இராசரத்தினத்தின் 135 ஆவது பிறந்த நாளும், பரிசளிப்பு நிகழ்வும் திருநெல்வேலி சைவவித்தியா விருத்திச் சங்க ஆராதனை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன.
சங்கத் தலைவர் சோ. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக புளொட் தலைவரும், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
ஆரம்ப நிகழ்வாக பெரியார் சு. இராசரத்தினம் அவர்களின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.
மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர் உரை, இல்லக விளக்கு என்ற மலர் வெளியீடு என்பன நடைபெற்றன. தொடர்ந்து பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஜ-159)

சிறைக் கைதிகளுக்கு கைத்தொழில் பயிற்சி

கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 9
சிறைக் கைதிகளுக்கு கைத்தொழில் பயிற்சி வழங்குவது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்று தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
கைதிகளுக்கு மறுவாழ்வு வழங்கி அவர்களுக்கு கைத்தொழில் பயிற்சித் திட்டங்களை வழங்குவது குறித்து தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நைற்றா நிறுவனத் தலைவர் நளிர் அஹமட்டுக்கும் சிறைத் துறைசார் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்றது.
சிறையிலுள்ள கைதிகளின் வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கு உதவும் வகையில் அவர்களுக்குத் கைத்தொழில் பயிற்சிகளை வழங்குவதுடன் அதனைப் பூர்த்தி செய்தவர்களுக்கு அரச அங்கீகாரமுள்ள சான்றிதழ்களை வழங்கவும், எதிர்காலத்தில் இதன் மூலம் அவர்கள் சமூகத்தில் நற்பிரசைகளாக வாழ்வதற்கான நடைமுறைகளை அறிமுகம் செய்யவும் இதன்போது ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.
நைற்றா நிறுவனம் தற்போது 16 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்கும் பல்வேறு கைத்தொழில் பயிற்சிகளை வழங்கிவருவதுடன், தகவல் தொழில்நுட்பம் குறித்த புதிய பாட விதானங்களை அறிமுகம் செய்து அவற்றுக்கான பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது. இந்த பயிற்சிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அவர்கள் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.
இந்த நடவடிக்கை காரணமாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலுமுள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர், யுவதிகள் தமது வாழ்க்கை வளமேம்பாட்டுக்கான பயிற்சிகளை பெற்றுவருவதுடன் தொழில்துறை வாய்ப்புக்களையும் பெற்று வருகின்றனர். சிறைக் கைதிகள் மற்றும் மனநிலை பாதிப்பிற்கு உள்ளானவர்களின் மேம்பாட்டுக்கான பயிற்சிகளை மேற்கொள்ளவும் நைற்றா நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது. (ம-7)

சந்தையில் நின்றவர் கைதாகி விடுவிப்பு

சாவகச்சேரி, ஜூலை 9
சந்தைக்குள் குவிந்த 50க்கு மேற்பட்ட பொலிஸார் அங்கு நின்ற 56 வயது நபரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்ட நபர் அரை மணி நேரத்தில் விடுவிக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை சாவகச்சேரி சந்தையில் இடம்பெற்றுள்ளது.
சாவகச்சேரி நகரப் பகுதியில் வந்த மகிழுர்தியொன்று அங்குள்ள மருந்தகத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளியை தள்ளிவிட்டுச் சென்றது.
அதனை அவதானித்த அவ்விடத்தில் நின்ற ஒருவர் வீழ்ந்து காணப்பட்ட உந்துருளியை நிமிர்த்தி நிறுத்திவிட்டு சாரதியை ஏசியுள்ளார். அவ்வேளையில் அங்கு வந்த மகிழுர்தியின் உரிமையாளர் உந்துருளிக்கு பாதிப்பு ஏற்பட்டால் நட்டஈடு வழங்கமுடியும். ஏன் கத்துகிறீர் எனக் கேட்டுள்ளார். அதனால் ஆத்திரமடைந்த பொதுமகன் மகிழுர்தியின் உரிமையாளரை பேசிவிட்டு சந்தைக்குச் சென்றுள்ளார். சிறிது நேரத்தில் மூன்று வாகனங்களில் சந்தைக்குள் வந்த பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை விடுவித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
(ஜ-9)

வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்குரிய இரண்டாம் கொடுப்பனவு இழுபறியில்

அலைந்து திரிகிறோம் என்று மக்கள் கவலை
வார இறுதியில் வரும் என்கின்றனர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபை மேற்கொள்ளும் வீடமைப்புத் திட்டங்களுக்கு அடுத்த கட்டக் கொடுப்பனவு வழங்கப்படாததால் பயனாளிகள்
கொடுப்பனவு தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு அலைகின்றோம் என்று தெரிவித்துள்ளனர்.
தேசிய வீடமைப்பு அதிகார சபை இந்தவருடம் தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைப்பதற்கு பயனாளிகளைத் தெரிவு செய்தது. பிரதேச செயலக ரீதியாக தெரிவு நடைபெற்று ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. வேலைகளை ஆரம்பித்தவர்களுக்கு முதற்கட்டக் கொடுப்பனவாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்ட நிலையில் வேலைகளைத் துரிதமாக நடைபெற்றன. ஆனால் அடுத்த கட்ட வேலைகளுக்குக் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படாமையால் அதைப் பெற்றுத் தருமாறு கோரி மக்கள் பிரதேச செயலகங்களுக்கு அலைந்து திரிகின்றனர். அடுத்த கட்டக் கொடுப்பனவை விரைவில் தரும் பட்சத்தில் வேலைகளை முடிவுறுத்த முடியும் என்று தெரிவித்துள்ளனர்.
இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது தெரிவிக்கப்பட்டதாவது:
கொழும்பு திறைசேரியில் இருந்து நிதி விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டக் கொடுப்பனவு இந்த வார இறுதிக்குள் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
(த-7)

தென்னிலங்கை சிங்களவர் தேசமென்னின் வடக்கு-கிழக்குப் பகுதி தமிழர் தேசம்தான்!

ஞானசாரருக்கு சிவமோகன் எம்.பி. பதிலடி

மன்னார், ஜூலை 9
தென்னிலங்கை சிங்களவரின் தேசம் எனில், வடக்கு - கிழக்கு தமிழர் தேசம்தான். இதற்காகச் சிங்களவர்கள் கோபிக்கக் கூடாது என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.
பொதுபல சேனா அமைப்பின் சார்பில் அதன் செயலர் கலகொட அத்தே ஞானசாரா தேரர் தலைமையில் ஒரே நாடு ஒரே மக்கள் ஒரே சட்டம் என்னும் தொனிப்பொருளில் கண்டியில் தேரர்களின் மாநாடு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போது, இலங்கை சிங்களவர்களின் தேசம், தமிழர்கள் கோபம் கொள்ளக்கூடாது என்று நீண்ட கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். இது பற்றி கேட்டபோது, ஞானசாரரின் கருத்துக்குப் பதிலடிகொடுக்கும் வகையில் சிவமோகன் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் இனவாத விஷத்தை கக்குவதில் ஞானசாரதேரருக்குத்தான் முதலிடம். அவர் திருந்தப் போவதில்லை. அனைத்து இனங்களும் ஐக்கியமாக இருப்பது ஞானசார தேரருக்கு விருப்பமில்லை.
ஒரே நாடு ஒரே மக்கள் ஒரே சட்டம் என்று அறிக்கையை விட்டு இனவாத விஷத்தைக் கக்கியுள்ள ஞானசாரதேரரை எப்படி மத குரு என்று அழைப்பது?

தென்னிலங்கையை வேண்டாமென்றால் சிங்கள தேசமாக அறிவித்துக் கொள்ளுங்கள். ஆனால் வடக்கு கிழக்கு என்பது தமிழர்களின் பூர்வீகத் தாயகம். இதில் சிங்களவர்கள் கோபித்துக் கொள்ளவும் கூடாது. உரிமை கோரவும் கூடாது - என்றார்.
(த-213)

பரிசளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, ஜூலை 9
யாழ்ப்பாணம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நகர் பூமாரி மண்டபத்தில் மதியம் 1.30 மணிக்கு நடைபெறும்.
கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான சி.மதியழகன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் வ.நடராசா, மதிப்புறு விருந்தினர்களாக பழைய மாணவர்களான பேராதனை தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் எஸ். கோகுலன், சிவா ரேடியோ உரிமையாளர் வை. சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளமை முன்னுதாரண செயற்பாடு என கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர்.
(ஜ-9)

இனப்படுகொலையை வெளியுலகத்துக்கு கொண்டுவருவதில் தளம்பல் நீடிக்கின்றது

பச்சிலைப் பள்ளி சபைத் தவிசாளர் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூலை 9

இலங்கையில் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலையே. ஆனால் அதை வெளியுலகுக்குக் கொண்டுசெல்வதில் தளம்பல்நிலை காணப்படுகின்றது என்று பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி செயலருமான சு.சுரேன் தெரிவித்தார்.

பெண்கள் மேம்பாட்டு மையஒழுங்கமைப்பில் அதன் தலைவி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற நிலைமாறுகால நீதி தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழத் தமிழர்களாகிய நாங்கள் பல்வேறுபட்ட இன்னல்களைச் சந்தித்து, உயிர் இழப்புகளைச் சந்தித்து, உடமை இழப்புக்களைச் சந்தித்து இழக்கக் கூடாத அனைத்தையும் இழந்து மீண்டும் வந்திருக்கின்றோம். எங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை தொடர்பான விடயங்களை வெளியுலகுக்குக் கொண்டு செல்வதில் எங்களின் அரசியல் தலைமைகள் முனைப்புக் காட்டுகின்றனர்.

ஆனாலும் அந்த முயற்சியில் ஒரு தளம்பல் நிலை காணப்படுவதாக நான் உணர்கின்றேன். ஏனென்றால் முன்பு பேசப்பட்டது போல அல்லது முன்பு இடம் பெற்றது போல இந்த விடயங்களை யாரும் கருத்தில் எடுப்பதில்லை. அல்லது கண்டுகொள்வதில்லை. நாங்கள் இனப்படுகொலையைப் பன்னாட்டுச் சமூகத்துக்கும் அடுத்த தலைமுறைக்கும் கடத்த தவறுவோமாக இருந்தால் அல்லது வெளிப்படுத்தத் தவறுவோமாக இருந்தால் எங்கள் இனம் நிலைமாறுகால நீதிப் பொறிமுறையில் எதையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை தோன்றும். ஆகவே அனைத்து அரசியல் தலைமைகளும் தமது மக்களுடைய எதிர்காலத்தை நினைவில் கொண்டு எமது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை பன்னாட்டுச் சமூகத்துக்கு உரத்துக் கூறவேண்டும் -என்றார்.

(த)

யாழ்.கட்டளைத் தளபதி ஆளுநரைச் சந்தித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை ஆளுநர் செயலகத்தில் நேற்று சந்தித்தார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி ஆளுநருக்கு தனது ஓய்வு குறித்து தெரிவித்துக்கொண்டார்.

போருக்கு பின்னரான காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைகளின் பிரதானியாக பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளில் திறமையாக செயற்பட்டமையை பாராட்டிய ஆளுநர் இந்த சேவையை ஆற்றியமைக்கு தனது நன்றியையும் இதன்போது தெரிவித்தார்.

இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் ஆளுநர் யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதிக்கு நினைவுப்பரிசு ஒன்றையும் வழங்கிவைத்தார்.

(ஜ-7)

விவசாய நிலங்களைத் துப்புரவுசெய்ய நிதி கிடைத்தும் இழுபறிப்படுவது ஏன்?

கொக்குத்தொடுவாய் விவசாயிகள் கேள்வியெழுப்புகின்றனர்

முல்லைத்தீவு, ஜூலை 9

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் காடுகளாக உள்ள விவசாய நிலங்களைத் துப்பரவு செய்து தரும்படி கோரியிருந்தோம். அதற்கென்று நிதி ஒதுக்கப்பட்டு நீண்ட நாள்களாகியும் இன்றுவரை துப்புரவு செய்துதரப் படவில்லை என்று அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதி தொடர்ந்தும் காடாகக் காணப்படுமானால் சிங்கள மக்கள் தமது காணிகளை அபகரிக்கும் முயற்சியும் இடம்பெறலாம் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே தமது விவசாய நிலங்களை விரைவுபடுத்தித் துப்புரவு செய்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், 1984ஆம் ஆண்டு கொக்குத்தொடுவாய் மக்கள் இராணுவத்தால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டோம். 2011ஆம் ஆண்டு காலப் பகுதியிலே மீள் குடியமர்த்தப்பட்டோம். குடிய மரும்போது விவசாய நிலங்கள் காடுகளாகக் காட்சியளித்தன.

அதனைத் துப்புரவு செய்துதருமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி சிறிஸ்கந்தராசாவிடம் முறையிட்டிருந்தோம்.

இந்த நிலையில் மறுவாழ்வு அமைச்சினூடாக 11மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட, சகலாத்து வெளி, பாலங்காடு, பூமடுகண்டல், நாய் அடிச்ச முறிப்பு, அக்கரவெளி போன்ற விவசாய நிலங்களைத் துப்புரவு செய்து தருவதாகவும் கூறப்பட்டிருந்தது. அவற்றுக்கு நிதி ஒதுக்கப்பட்டும், இன்றுவரை துப்புரவுப் பணிகள் இடம்பெறவில்லை.

விவசாய நிலங்கள் துப்புரவு செய்வதில் தாமதம் ஏற்பட்டால், எமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படும். சிங்கள மக்கள் விவசாயக் காணிகளை அபகரிக்கவும் முயற்சிப்பர்.

எனவே தமது காணிகளை விரைவுபடுத்தித் துப்புரவு செய்துதருமாறு, உரிய அதிகாரிகளை அங்குள்ள மக்களாகிய நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம் -என்று கோருகின்றனர்.

(த-246)

துப்பாக்கி ரவைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

வீட்டின் பின்புறம் புதைக்கப்பட்ட நிலையில் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

மன்னார், உப்புக்குளம் பகுதியில் கடந்த சனிக்கிழமை இவை மீட்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் மற்றும் மன்னார் குற்றத் தடுப்புப் பிரிவினர் இணைந்து மன்னார், உப்புக்குளம் பகுதியில் நடத்தப்பட்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது 14 ரவைகள் மீட்கப்பட்டன.

அந்த வீட்டில் குடியிருந்த 71, 62 மற்றும் 29 வயதுடைய மூன்று நபர்களை சந்தேகத்தில் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-7)

பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாண மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்க சுன்னாகக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் தலைவர் சி.பிரதீபன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, போக்குவரத்துப் பொறுப்பதிகாரி, வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தவிசாளர், யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத் தலைவர், சுன்னாகம் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

சுன்னாகம் முச்சக்கரவண்டிச் சங்கத்தால் மது ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு அனைத்து முச்சக்கர வண்டிகளுக்கும் போதைப்பொருள் பாவனை அற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற வாசகம் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

அத்துடன் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பழைய நிர்வாகமே மீண்டும் தெரிவு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ)

விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றலுக்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜூலை 9

வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றலுக்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதால் எதிர்பார்த்த இலக்கை அடையமுடிந்துள்ளது.

இவ்வாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

"திணைக்களத்தால் எழுதுமட்டுவாழ், கொடிகாமம், மீசாலை வடக்கு, வரணி போன்ற பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளன.

நேற்று மட்டுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப் பகுதியில் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதும் கைதடி பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் ஏற்றப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் அனைத்துப் பிரிவு வளர்ப்புநாய்களை ஓரிடத்துக்கு அழைத்துவரும் முறைமை நீக்கப்பட்டு ஒவ்வொரு ஒழுங்கையிலும் உள்ள பொது அமைப்புக் கட்டடம் அல்லது கோவில் அல்லது வணிக நிலையம் ஆகியவற்றுக்கு வளர்ப்பு நாய்களைக் கொண்டு வருமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படுவதையடுத்து பொதுமக்கள் தமது ஒத்துழைப்பு வழங்கி வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து தடுப்பூசி மருந்து ஏற்றிவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

திணைக்கள அலுவலர்கள் பிரதேசத்தில் காலை தொடக்கம் மாலை வரை பெருமளவு இடங்களில் நிலையங்களை அமைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றி வருகின்றனர்" எனவும் தெரிவித்தனர்.

(ஜ-9)

கூட்டமைப்பும், ரிசாத்தும் அரசுக்கு ஆதரவளிப்பர்!

பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 9

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது தமிழ் தேசிய கூட்டமைப்பும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் அரசுக்கு ஆதரவளிப்பார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாளை விவாதத்துக்கு வருகின்றது.

அதையடுத்து எதிர்வரும் வியாழக்கிழமை நம்பிக்கையில்லாத்தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன்போது இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பும் ரிசாத் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்குவார்கள்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வெற்றிக் கொள்ள ஐக்கிய தேசிய கட்சி உரிய திட்டங்களை வகுத்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் கோரிக்கைகள் தற்போது அரசால் நிறைவேற்றப்படும். மறுபுறம் பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள ரிசாத் பதியுதீனும் குற்றச்சாட்டுக்களில் இருந்து முழுமையாக எவ்வித விசாரணைகளுமின்றி விடுவிக்கப்படுவார். எனவே சம்பந்தன் மற்றும் ரிசாத் அணுசரனையுடன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடையும்.

ஐக்கிய தேசிய கட்சி அரசுக்கு தேசிய பாதுகாப்பை விட அரசின் பாதுகாப்பே முக்கியமாக உள்ளது - என்றார்.

(எ-173)

வீதியில் குவியும் மணலால் விபத்துக்கள் அதிகரித்தன

அதனை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

சாவகச்சேரி, ஜூலை 9

கைதடி கோப்பாய் பாலத்துடன் காணப்படும் தார் வீதி மணல் மண்ணால் மூடப்பட்டுக் காணப்படுவதால் வாகன விபத்துக்கள் ஏற்படுகிறன. அதனை அப்புறப்படுத்த உரிய திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வாகனச் சாரதிகள் கோரிக்கை விடுகின்றனர்.

பாலத்தை அண்டிய கடலோரி நீரின்றிக் காணப்படுவதால் தற்போது வீசும் கடும் காற்றால் மணல் புழுதியாகப் பறந்து வீதியில் குவிந்து காணப்படுகிறது எனவும் சிறிய மழை பெய்யுமாயின் வீதியில் பயணிக்கும் உந்துருளிகள் விபத்துக்கு உள்ளாகும் அபாய நிலை காணப்படுகிறது. எனவே பாலம் உள்ளிட்ட வீதியில் காணப்படும் மணல் மண்ணை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர். கைதடி கோப்பாய் பாலம் இரும்புப் பாலமாக தகடுகள் போடப்பட்டுள்ளதால் சிறிய ஈர்க்கசிவு காணப்பட்டாலும் வாகனச்சில்லுகள் சறுக்கும் அபாய நிலை காணப்படும் எனவும் தெரிவித்தனர். (ஜ-9)

வசதியற்ற 13 மாணவருக்கு வங்கிக் கணக்கு ஆரம்பிப்பு

வவுனியா, ஜூலை 9

வவுனியாவில் வசதியற்ற 13மாணவர்களுக்கு 'அஞ்சலா' உதவும் கரங்கள் அமைப்பினரால் வங்கியில் பணவைப்புப் புத்தகங்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா ஓமந்தையில் வசதியற்ற தெரிவு செய்யப்பட்ட 13பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆயிரத்து 500ரூபா வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்ட புத்தம் வெளிநாட்டில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவுகளின் நண்பர்களின் நிதிப் பங்களிப்பில் தொடர்ச்சியாக வைப்பிலிட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(த)

நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

கொடிகாமம், ஜூலை 9

யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரி மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அதிபர் எஸ். இந்திரகுமார் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி இயக்குநர் சுப்பிரமணியம் முகுந்தன், மதிப்புறு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவர்களான திருமதி ரஜினி கருணா கரன், ராஜரட்ணம் சாந்தன்உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஜ-159)

உற்பத்திப் பொருள்கள் சேகரிப்பு நிலையத்துக்கு

கிளைகளை அமைப்பது தொடர்பான கருத்தமர்வு

சாவகச்சேரி, ஜ்லை 9

உற்பத்திப் பொருள்கள் சேகரிப்பு நிலையத்துக்கு பிரதேசத்தில் கிளைகள் அமைப்பது தொடர்பான கருத்தமர்வு நேற்று சாவகச்சேரி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பொருளாதார மத்திய நிலையத்தினரால் உற்பத்திப் பொருள்கள் சேகரிப்பு நிலையம் சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் அமைக்கப்பட்டு எதிர்வரும் செப்ரம்பர் மாதம் திறந்து வைக்கப்படவுள்ளது. இதற்கான கிளைகள் அமைப்பது தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தமர்வில் பிரதேசத்தில் செயற்படும் கமக்கார அமைப்புகள், விவசாயத் திணைக்களங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கயிலேஸ்வரன் விவசாயப் பொறியியலாளர் உட்பட பெருமளவு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஜ-9)

காரைநகர் மக்களுக்கான தண்ணீர் நிறுத்தம்: அதைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை

காரைநகர் மக்களுக்கு 'எவ்றி டேய்ஸ்' நிறுவனத்தால் வழங்கப்பட்டு வந்த குடி தண்ணீர் கடந்த முதலாம் திகதியிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். இதனால் தாம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம் என்று கூறும் அந்தப் பகுதி மக்கள் ஏதாவது ஒரு வழியில் தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நன்னீர்க் கிணறுகள் எவையும் அற்ற அந்த காரைநகர் மக்களுக்கு பிரதேச சபை, காரை அபிவிருத்திச் சபை, எவ்ரிடே என்ற அமைப்புக்களால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் அனுமதியுடன் பெரிய விளான் பகுதியில் குடிதண்ணீர் எடுத்துவரப்பட்டு காரைநகர் மக்களுடையதாகம் தீர்க்கப்பட்டது. ஒரு குடும்பத்துக்கு ஒருவாரத்துக்கு 500 லீற்றர் குடிதண்ணீரே வழங்கப்பட்டது. எனினும் விளானில் இருந்து அனுமதியையும் மீறிய அளவு தண்ணீர் காரைநகருக்கு கொண்டு செல்லப்படுகிறது என்று தெரிவித்த விளான் மக்கள் அதனால் விளான் பகுதியில் உள்ள கிணறுகள் உவர் நீராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்து தண்ணீர் எடுப்பதற்கு தடைபோட்டனர். தண்ணீர் எடுப்பதை நிறுத்துமாறு தண்ணீர் எடுக்க வந்த பவுசர்களை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றுமுதல் காரை அபிவிருத்திச் சபையால் வழங்கப்பட்ட காரைநகருக்கான குடிதண்ணீர் சேவை தடைப்பட்டது. தொடர்ச்சியாக எவ்ரிடே அமைப்பு நிலாவரை, பலாலி ஆகிய இடங்களில் இருந்து தண்ணீரைப் பெற்று மக்களின் குடி தண்ணீர் தேவையை நிறைவேற்றி வந்தது. இந்த நிலையில் தற்போது பலாலியில் இருந்து பெற்ற தண்ணீரும் தடைப்பட்டுள்ளது. இதனால் குடிதண்ணீர் வழங்கும் சேவையை கடந்த முதலாம் திகதிமுதல்நிறுத்தியுள்ளதாகஎவ்ரிடே அமைப்பினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அமைப்பின் முகாமையாளர் அம்பிகாபதி கருத்துத் தெரிவிக்கையில்

'நீர்வளச் சபையின் ஆய்வுகளின்படி எவ்ரிடே நிறுவனம் நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் லீற்றர் தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ளனர். இந்த நிலையில் காரைநகர் மக்களின் குடி தண்ணீர் தேவைக்காக 70 ஆயிரம் லீற்றர் தண்ணீரை மட்டுமே எடுத்தோம். ஆனால் மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் எவ்வித முன்னறிவித்தலுமின்றி எமது சேவையை உடன் நிறுத்தியுள்ளார். இன்றும் தவிசாளர் அனுமதி வழங்கினால் எமது சேவையை தொடர்ந்து முன்னெடுப்போம் ' எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது மானிப்பாய் பிரதேச சபை குட்பட்ட மக்களுக்கு பிரதேச சபையால் நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லீற்றர் தண்ணீரை வழங்கி வருகின்றோம். இது அவர்களின் குடி தண்ணீர் தேவையை நிறைவு செய்கிறது. பிரதேச சபையின் நீர் வளத்தை பாதுகாக்கும் நோக்கில் தனியார் நிறுவனங்கள் தண்ணீர் எடுப்பதை தடைசெய்துள்ளோம் - என்றார்.

குடிதண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து காரைநகர் மக்கள் குடி தண்ணீருக்காகவே போராடும் நிலைக்குத்தள்ளப்பட்டள்ளனர். அபிவிருத்திகளை விடுத்து குடிப்பதற்கான நீரைப் பெற்றுத் தருவதற்கு வழிகோலுங்கள் என்று மக்கள் அங்கலாய்த்துள்ளனர். எனவே காரைநகர் மக்களுக்கான குடி தண்ணீர்தேவைதொடர்பில்உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ)

போதையில் சாரத்தியம் 433 பேர் சிக்கினார்கள்

கொழும்பு. ஜூலை 9

நாடு பூராகவும் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது, மதுபோதையில் வாகனம் செலுத்திய 433 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமையன்று மேற்கொள்ளப்பட்டிருந்த சுற்றிவளைப்புகளின்போது, 796 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-22)

தேசிய அ.அட்டை வழங்கும் பணிகள் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு. ஜூலை 9

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்திருந்த தேசிய ஆள் அடையாள அட்டை வழங்கும் ஒருநாள் சேவை நேற்றுமுதல் மீண்டும் செயற்படுகிறது என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்தார்.

திணைக்களத்தின் உள்ள கணனி வலையமைப்புக்குள் இடம்பெற்ற கோளாறு காரணமாகவே இந்த செயலிழப்பு இடம்பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருநாள் சேவையினூடாக தினமும் ஆயிரத்து 500 முதல் 2 ஆயிரம் வரையிலான அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

இன்று முதல் வானிலையில் மாற்றங்கள்!

நாட்டில் தற்போது காணப்படும் வானிலையில் இன்று முதல் சிறிது மாற்றம் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

சப்ரகமுவ, மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவான மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

உண்மைத் தாற்பரியத்தை எடுத்தியம்பும் மனித உரிமை கண்காணிப்பக அறிக்கை

வரவேற்கின்றார் கிழக்கு முன்னாள் முதல்வர் நஸீர்

கொழும்பு, ஜூலை 9

முஸ்லிம்கள் கண்மூடித்தனமாகக் கைதுசெய்யப்படுவது உட்பட அவர்களுக்கு எதிரான அனைத்து முறைகேடுகளையும் இலங்கை அரசு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளமை வரவேற்கத்தக்க விடயம். தற்போதைய சூழ்நிலையின் உண்மையான தாற்பரியத்தை இந்த அறிக்கை கோடிட்டு காட்டியுள்ளமை பாராட்டுக்குரியது.' இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

'பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் உயிர்த்தஞாயிறு தாக்குதல்களின் பின்னர் பௌத்த தேசியவாதிகளால் முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை மீறும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளமை குறித்தும், அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும் ஏனைய முறைகேடுகள் குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன், முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் கும்பல்களின் வன்முறைகள், அந்தச் சமூகத்தினருக்கு எதிரான அச்சுறுத்தல்கள், ஒடுக்குமுறைகள் குறித்து அரச அதிகாரிகள் துரிதமாக முடிவைக் காண வேண்டும் என வும் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு பெருமளவானவர்கள் அரசு தான் நீக்குவதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வாக்குறுதியளித்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும், மனித உரிமை முறைகேடுகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் பன்னாட்டு மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்தியிருப்பது முஸ்லிம் மக்களுக்கு ஆறுதலைத் தந்துள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட விடயங்களில் அரசு முழுமையாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை நாமும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

தொடர்ந்தும் இனவாத சக்திகளின் நெருக்குவாரங்கள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. இதனைக் கட்டுப்படுத்த அரசு துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றபோதும் இனக்குரோதங்களைத் தூண்டும் செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. முதலில் இவற்றை நிறுத்த ஆரோக்கியமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

'பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும்' நோக்கோடு அரசு செயற்படுகின்றதா என்ற எண்ணம் தற்போது முஸ்லிம் சமூகத்தின் மனங்களில் ஏற்பட்டு வருகின்றது. இந்த எண்ணத்தை நீக்க அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' - என்றுள்ளது. (மு-22)

சீனப் பெண்ணின் வீட்டுக்குள் தாக்குதல்

நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் கைது

கொழும்பு, ஜூலை 9

ஐக்கிய தேசியக் கட்சியின் நீர்கொழும்பு தொகுதி முன்னாள் அமைப்பாளரும் நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ரொய்ஸ் விஜித பெர்னாண்டோ நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் நீர்கொழும்புநகரில் வைத்து கட்டானப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சீன நாட்டுப் பெண்ணொருவருக்கு சொந்தமான வீடொன்றுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியமை மற்றும் அங்கிருந்த பொருள்களைக் கொள்ளையிட்டு சென்றமை ஆகிய முறைப்பாடுகளுக்கமைய அவர் முதன்மைச் சந்தேகநபராகக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நீர்கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ரொய்ஸ் விஜித பெர்னாண்டோ நாளை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரையில் 5 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் கட்டானப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ரொய்ஸ் விஜித பெர்னாண்டோ கடந்த சில வருடங்களுக்கு முன் நீர்கொழும்பில் நகைக்கடை ஒன்றை கொள்ளையிட்டமை தொடர்பாக கைதுசெய்யப்பட்டுப் பிணையில் விடுதலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-22)

காணி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு சிலர் இடையூறு

ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 9

இலங்கை மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நடவடிக்கையை நிறுத்துவதற்கு சிலர் முயல்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு இடமளிக்கப் போவதில்லை என்று தெரிவித்தார் தலைமைஅமைச்சர்ரணில்.

அம்பாறை மாவட்டத்தில் நீண்டகாலமாக காணி உறுதிப் பத்திரங்கள் கிடைக்காத ஆயிரத்து 456 பேருக்கு, காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு அம்பாறையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தடுத்து நிறுத்த யாராவது முற்படின், மக்களுடன் பாதையில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்யவும் தயார். காணி உறுதிகளை வழங்கும் அமைச்சரவைப் பத்திரத்தை தயாரித்து அமைச்சரவையின் அனுமதிக்கு அனுப்பப்பட்டபோது அதற்கு அனுமதியைப் பெற இரு வருடங்கள் சென்றது. தற்பொழுது அதற்கான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

2 கிலோ ஐஸ் போதைப்பொருளுடன் வானூர்தி நிலையத்தில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 9

இரண்டு கிலோகிராம் ஐஸ் போதைப் பொருடன் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்து ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் லாவோஸ் நாட்டுக் குடிமகன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லாவோஸ் நாட்டுப் பிரஜை ஒருவர் இலங்கையில் கைதுசெய்யப்படுவது இதுவே முதன் முறையாகும் என பொலிஸ் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேரக தெரிவித்துள்ளார். 25 வயதுடைய மேற்படி இளைஞர் மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து இலங்கையை வந்தடைந்தார் என்றும் அவரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டார். (ம)

வெளிநாட்டிலிருந்து வந்த மனைவியை கொடூரமாகக் கொலைசெய்த கணவன்

கொழும்பு, ஜூலை 9

வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்த மனைவியைக் கத்தியால் குத்திக் கொலைசெய்த கணவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். குறித்த இருவருக்கும் இடையில் நீண்டகாலமாக் முரண்பாடு இருந்து வந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹசலக பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான ஸ்ரீயானி தயாரத்ன என்ற 3 பிள்ளைகளின் தாயே கொலைசெய்யப்பட்டுள்ளார். கத்திக் குத்துக்கு இலக்கான மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், அவரது சடலத்தை வயல் வெளியில் வைத்து கணவர் எரித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெளிநாட்டிலிருந்து இரண்டு வருடங்களுக்குப் பின்னர் நாடு திரும்பிய மனைவியே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

தாயகம் திரும்பிய பெண், வீட்டுக்குச் செல்லாமல் தனது தாயாரின் கம்பளை வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு ஒரு வாரம் தங்கியிருந்த அவர் தனது தாயாருடன் நேற்றுமுன்தினம் கணவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

நேற்றுக் காலை தாயாரைக் கண்டி பஸ்ஸில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பி வைத்த நிலையில் கணவருடன் மனைவிக்கு மோதல் ஏற்பட்டுள்ளது. இதன்போது கணவர் மனைவியைக் கத்தியால் குத்திக் கொலைசெய்துள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (மு-22)

தோற்றுப்போயுள்ளது பேரினவாத நாடகம்!

கல்முனை மாநகரசபை உறுப்பினர் அப்துல் மனாப் இப்படித் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 9

பொய்க் குற்றச்சாட்டுக்கள் மூலம் முஸ்லிம் அரசியல் தலைவர்களைப் பதவி துறக்க வைத்து அரங்கேற்றிய பேரினவாத நாடகம் தோற்றுப்போனது எனக் கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம். அப்துல் மனாப் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக அரங்கேற்றப்படும் பேரினவாத செயற்பாடுகள் தொடர்பாக நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களின் இருப்பை கேள்விக்குறியாக்கும் வேலைத் திட்டங்கள் கனக்கச்சிதமாக இன்று பேரினவாதிகளால் அரங்கேற்றப்படுகின்றன. பொருளாதாரம், வாழ்வியல், ஆன்மிகத் துறையில் முஸ்லிம் சமூகம் முன்னோக்கிச் செல்வதனை பொறுத்துக் கொள்ள முடியாமல் தடுப்பதற்கு பல்வேறுபட்ட கோணங்களில் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கையில் 30 வருட கால போர் நிறைவுக்கு வந்த பிறகு, போர்ச் சூழலை வைத்து அரசியல் பிழைப்பு நடத்திய வங்குரோத்து அரசியல்வாதிகள், மீண்டும் ஒரு இருண்ட யுகத்தை முஸ்லிம் சமுகத்தை சீண்டுவதன் மூலம் ஏற்படுத்தி அதில் அரசியல் செய்ய எத்தனிப்பது தெளிவாகிறது.

இன்றைய முஸ்லிம் சமுகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்ற அனைத்து அட்டூழியங்களுக்கும் இனவாதிகளின் நிகழ்ச்சி நிரலும், அரசியல்வாதிகளின் ஆசீர்வாதமுமே பின்புலமாக இருக்கின்றது. இனி நாட்டில் எப்போது தேர்தல் காலம் வருமோ அப்போது கூடவே இனவாதம், மதவாதம் முதலீடாக விதைக்கப்படும் இதற்கு அண்மைக்கால வரலாறு சான்று பகர்கிறது.

இதனை அடியொட்டிய திட்டமே முன்னாள் அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிசாத் பதியுதீன் மீதான குற்றச்சாட்டு பொய் என்பதை பொலிஸ் மா அதிபர் கடிதத்தின் மூலம் உறுதிப் படுத்தியது மட்டுமல்லாது, இராணுவத் தளபதியும் தனது நேரடி வாக்குமூலத்தின் மூலம் இக்குற்றச் சாட்டு பொய் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். அதுபோல் முன்னாள் ஆளுநர்களான அஸாத் சாலி, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் போன்றோருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களும் பொய் என நிரூபணமாகி வருகிறது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முஸ்லிம் தரப்பினருக்கும் உயிர்த்தஞாயிறுகுண்டுவெடிப்புத்தாக்குதலுக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லாததை சட்டமே இன்று சான்று பகர்கிறது. அதுபோல் மருத்துவர் ஷாபி போன்ற பலருக்கு பேரினவாதிகளால் அவர்களின் பெயர்களுக்கு தற்காலிக களங்கம் ஏற்பட்ட போதும், அவை அனைத்தும் தோல்வியைத்தழுவி வருகின்றன - என்றார்.

(ம)

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புக் கலந்துரையாடல் நாளையதினம்

கொழும்பு, ஜூலை 9

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை காலை, நாடாளுமன்றில் நடைபெறவுள்ளதாக திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

இதன்போது சில அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடவுள்ளதாகவும், ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் அமைச்சுப் பதவிகளைப் பொறுப்பேற்குமாறு ஐக்கிய தேசிய கட்சி விடுத்துள்ள வேண்டுகோள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலின் பின்னரே பதவிகளை மீண்டும் பொறுப்பேற்பதா? இல்லையா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

கல்முனையைக் கூறுபோட கோடிஸ்வரனால் முடியாது

கொதிக்கின்றார் யஹ்யாகான்

மட்டக்களப்பு, ஜூலை 9

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோடிஸ்வரன் சொல்வது போன்று கல்முனையை கூறுபோடுவதற்கு கல்முனை அவருடைய அப்பன் வீட்டு சொத்தல்ல. கல்முனைக்கான எல்லைகள் சரியான அடிப்படையில் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லாத வகையில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும் அம்பாறை மாவட்ட பொருளாளருமான ஏ.சி.யஹ்யாகான் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை எங்களது அடையாளமாக இருக்கிறது. இதனை அழித்து அவர்களுடைய தேவைக்கேற்ப பிரித்துக்கொள்ள அனுமதிக்க முடியாது. தமிழர் தரப்பினர் கேட்கின்ற நியாயமான எல்லையை ஏற்றுக்கொள்வோம், அதை பிரித்தும் கொடுப்போம். ஆனால் முஸ்லிம் சமூகத்தின் ஆள்புல எல்லைகள் மிகவும் துல்லியமாக வரையறுக்கப்பட்டாக வேண்டும். அவ்வாறு நடைபெறாமல் அரசை பயம்காட்டி நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்து காரியம் சாதிக்க கோடிஸ்வரன் நினைக்கின்றார். அவ்வாறு நினைப்பது மடமைத்தனமாகும். முஸ்லிம் காங்கிரஸின் முட்டில் தான் இந்த அரசு இன்னும் பயணிக்கிறது. முட்டை எடுத்து விட்டால் நடுவீதியில் இந்த அரசு வரும் என்பதை அவர் உணரவேண்டும் - என்றார். (ம)

பௌத்தத்துக்கே முன்னுரிமை இப்படி கூறுகிறார் கிரியெல்ல

கொழும்பு, ஜூலை 9

இலங்கையானது சிங்கள பௌத்த நாடு என்பதை போன்று ஏனைய இன, மத மக்களும் ஒற்றுமையாக வாழும் நாடாகும் என்று தெரிவித்தார் சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.

தனது பதவிக்காலம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் விளக்கத்தைக் கோர அரச தலைவர் தயாராகின்றார் என்று தெரிவிக்கப்படும் செய்தி குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'இலங்கையானது சிங்கள பௌத்த நாடு என்பதை போன்று ஏனைய இன, மத மக்களும் ஒற்றுமையாக வாழும் நாடாகும். சமகால அரசு அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரத்தையும், சந்தர்ப்பத்தையும் வழங்கி செயற்படுகிறது. வரலாற்றைப்புரட்டிப்பார்த்தால் இது தெளிவாகும். அநுராதபுர யுகத்திலிருந்து கண்டி மன்னராட்சியுகம்வரை பௌத்த மதத்திற்கே முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

முடிசூடுவதற்கும், ஆட்சியை கொண்டு செல்வதற்கும் பௌத்த மதம் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்பட்டது. இனத்தை விட மதத்துக்கே முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதேபோன்று அனைத்தின மக்களும் சமமாக நடத்தப்பட்டனர். நாங்கள் அன்று பாடசாலைகளில் கற்ற வரலாறுகள் இன்று கற்பிக்கப்படுவதில்லை. அது பெரிய குறைபாடாகும்.

ஒல்லாந்து நாட்டவர்களிடமிருந்து முஸ்லிம் மக்களை காப்பாற்றி கிழக்கு மாகாணத்தில் குடியமர்த்தியது சேனாரத் மன்னர் தான் என்பது எமது பிள்ளைகளுக்குத் தெரியாது. அவ்வாறுதான் எமது மன்னர்கள் நாட்டின் அனைத்து மக்களையும் பாதுகாத்திருந்தனர். அதேபோன்று தான் கடந்தகால அரசுகளும் அனைத்தின மக்களையும் பாதுகாத்திருந்தனர். நாமும் நாட்டின் எதிர்காலத்துக்காக இந்தச் செயற்பாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் - என்றார். (ம)

தாமரைக் கோபுரத்தின் கட்டுமானம் நிறைவுக்கு

கொழும்பு தாமரைக் கோபுர நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் இந்த நிர்மாண செயற்றிட்டத்தின் இறுதிக்கட்ட மேற்பார்வை நடவடிக்கைகள் தற்போதுமுன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் செயற்றிட்ட ஆலோசகர் பேராசிரியர் சமித்த மானவடு தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பமான இந்த செயற்றிட்டம் ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த கோபுரத்தின் உயரம் 356 மீற்றர்களாகும். இந்த கோபுரத்தின் கீழ்மட்ட மூன்று மாடிகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள எட்டு மாடிகளில் இரண்டு மாடிகள் களியாட்ட நிகழ்வுகளுக்கும் தொலைத்தொடர்புநடவடிக்கைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் ஆலோசகர் தெரிவித்தார். ஒவ்வொரு மாடியிலும் சுமார் 400 பேர் உள்ளடங்கக்கூடிய இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த கோபுரத்தில் 250 வாகனங்கள் நிறுத்துவதற்கான தரிப்பிட வசதிகளும் உள்ளன. தொலைத்தொடர்பு நெறிப்படுத்தல் ஆணைக்குழுவின் கீழ் இந்த நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலரின் மேற்பார்வையில் இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

உரிமைகளை விட்டுக்கொடுத்து அரசியல் செய்யப்போவதில்லை

அப்துல்லா மகரூப் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

அபிவிருத்தி மட்டும் நோக்கமல்ல. அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுத்து அரசியல் செய்யமாட்டோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்துல்லா மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்காக போராடுகிறோம். முஸ்லிம்களின் மதம், பாதுகாப்பு, வாழ்வாதாரம், காணி போன்ற விடயங்களை இழந்து வாழ்ந்து வருகிறோம். பேரினவாதிகளின் அடாவடித்தனங்களுக்கும் அட்டூழியங்களுக்குள்ளும் தள்ளப்பட்டு எமது குரல்வளைகளை நசுக்குகின்ற சதிகாரர்களாக நாட்டு நிலைமைகள் படுமோசமாக மாறியிருக்கின்றன. முஸ்லிம் சமூகம் சிங்கள பௌத்த மக்களுடன் போராட்டத்தை நடத்துவதில்லை. எமது மார்க்கம் ஒற்றுமையை விரும்புகிறது - என்றார். (ம)

இனவாத, மதவாதக் கட்சிகளை பதிவு செய்யாதிருக்கத் தீர்மானம்

இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் அரசியல் கட்சிகளை பதிவு செய்யாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கட்சிகள் உருவாக்கப்படுவதால், அரசியல், சமூகம் மற்றும் மத ரீதியில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாகவும், இதன்காரணமாகவே குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

லண்டன் செல்லவுள்ளார் அரச தலைவர் மைத்திரி

கொழும்பு, ஜூலை 9

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன லண்டனுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டார்.

தனது மகன் தஹாம் சிறிசேனவின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார். லண்டனில் மூன்று நாள்கள் அவர் தங்கியிருப்பார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

மகிந்த காணும் கனவுக்கு சாவுமணி அடிக்கவேண்டும்

அமீர் அலி முழக்கம்

கொழும்பு, ஜூலை 9

சிறுபான்மை சமூகத்தை புறந்தள்ளி விட்டு நூறு வீதம் பௌத்த வாக்குகளால் ஒரு அரசதலைவராக வர முடியுமென மகிந்த ராஜபக்ச போன்றவர்கள் காண்கின்ற கனவுக்கு சாவு மணியடிக்க வேண்டிய பொறுப்பு ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களுக்கும் இருக்கின்றது என முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எங்களைச் சுற்றி காவியுடை தரித்தவர்கள் வன்முறைகளைத் தூண்டுகின்றவர்கள், முஸ்லிம்களைக் கொன்றொழிக்க வேண்டுமென்று சொல்கின்றார்கள். முஸ்லிம்கள் அதிகமாக குழந்தை பெற்றுக் கொள்கின்றார்கள் என அநியாயமாக பழிசுமத்துகிறவர்கள் அல்லது முஸ்லிம்கள் எதிர்காலத்திலே இந்த நாட்டைப் பிடித்து விடுவார்கள் என்ற அச்சத்தை அநியாயமாகத் தோற்றுவிக்கின்றவர்கள் எல்லோரையும் தோற்கடிக்கின்ற பொறுப்பு முஸ்லிம்களுக்கும் சிறுபான்மை மக்களுக்கும் இருக்கின்றது.

எங்களுடைய ஈமானையும் எங்களுடைய பர்தாக்களையும், பள்ளிவாசல்களையும் சதிகார பௌத்த துறவிகளிடத்திலிருந்து பாதுகாக்க வேண்டிய தேவை எங்களுக்கிருக்கின்றது. எனவேவிரைவில் நடக்கவிருக்கின்ற அரச தலைவர் தேர்தலில் நீங்கள் எல்லோரும் வீதிக்கு வந்து போராட வேண்டியதொரு தேவைப்பாடு இருக்குமென நான் நினைக்கின்றேன்.

இந்த முஸ்லிம் சமூகத்தை புறந்தள்ளிவிட்டு ஒரு அரசதலைவர்வரமுடியாதென்கின்ற செய்தியை நாம் ஆணித்தரமாக சொல்லவேண்டும். சிறுபான்மைச் சமூகமான இந்து சமூகத்தையும், கிறிஸ்தவ சமூகத்தையும், முஸ்லிம் சமூகத்தையும் புறந்தள்ளி விட்டு நூறு வீதம் பௌத்த வாக்குகளால் ஒரு அரசதலைவராக வரமுடியுமென மகிந்த ராஜபக்ச போன்றவர்கள் காண்கின்ற கனவுக்கு சாவு மணியடிக்க வேண்டிய பொறுப்பு இந்த நாட்டிலே இருக்கின்ற ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களுக்கும் இருக்கின்றது.

இதிலே மிகவும் தெளிவாக நீங்கள் இருந்து கொள்ளுங்கள். இதற்குள்ளே நீங்கள் வேறு விதமான கதைகளை பேசிக் கொண்டிருந்தால், வேறு கட்சி ரீதியான குரோதங்களை வளர்த்துக் கொண்டிருந்தால் அல்லது நாங்கள் அப்படி நடப்போம், இப்படி நடப்போமென்று பேசிக்கொண்டிருந்தால் ஒட்டு மொத்தமாக நாம் தோற்றுப்போய்விடுவோம். அதனோடு இணைந்து ஒட்டுமொத்த சிறுபான்மைச் சமூகமும் இந்த நாட்டிலே மதிக்கப்படாது, தூக்கி எறியப்படுகின்ற அல்லது துரத்தப்படுகின்ற நிலை உருவாகிவிடும் - என்றார். (ம)

அக்மீமன துப்பாக்கிச் சூடு

சிப்பாயிடத்தில் தவறு இல்லை

இராணுவ ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

அக்மீமன பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய் சட்டத்தின் அடிப்படையில் எவ்வித தவறையும் இழைக்கவில்லையென்பது ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாக இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

கடந்த 4ஆம்திகதியன்று தனதுமகன் சுகயீனமுற்றிருப்பதாக பாடசாலையில் இருந்து சென்ற தொலைபேசி அழைப்பு ஒன்றையடுத்து அவரைப் பார்ப்பதற்காக மேற்படி தந்தை பாடசாலைக்குச் சென்றுள்ளார். அவர் உட்பிரவேசிக்க முற்பட்டபோது வாசலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவச் படைச்சிப்பாய் அவருடன் தர்க்கம் புரிந்து பின்னர் உட்பிரவேசிக்க அனுமதிமறுத்து இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த நபர் சிப்பாயின் துப்பாக்கியை பலவந்தமாகப் பறிக்க முற்பட்டார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவச் சிப்பாயிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் நடத்தி வந்தனர். இதன் அடிப்படையிலேயே தற்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

அடுத்த பொதுத்தேர்தலுடன் அரசியலில் இருந்து ஓய்வு!

மங்கள இப்படித் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் தான் அரசியல் வாழ்க்கையில் இருந்து ஓய்வுபெறப் போவதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் பொதுத் தேர்தல் எனது இறுதித் தேர்தலாக இருக்கும். தற்போது எனக்கு 63 வயதாகின்றது. இன்னும் 5 வருடங்கள் சேவை செய்தாலே போதும்.

நாம் அனைவரும் ஓய்வு *பெற வேண்டிய* நேரத்தை அறிந்திருக்க வேண்டும் என அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார். (ம)

சீனாவால் வழங்கப்பட்ட கப்பல் கொழும்புக்கு நேற்று வந்தது

கொழும்பு, ஜூலை 9

சீன அரசால் இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ள பி625 கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலை உத்தியோகப்பூர்வமாக இலங்கை அரசிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த 5ஆம் திகதி சீனாவின் செங்ஹாயில் உள்ள கடற்படை பிரிவில் இடம்பெற்றது.

இலங்கை கடற்படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி றியர் எட்மிரல் நிசாந்த உலுகேதென்னவின் தலைமையிலான குழுவினர் இதில் கலந்துக்கொண்டிருந்தனர்.

1994ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இந்த கப்பல், 112 மீற்றர் நீளமும், 12.4 மீற்றர் அகலமும் கொண்டது. இதன் எடை அண்ணளவாக 2 ஆயிரத்து 300 தொன்கள்.

இலங்கை கடற்படை கப்பல் குழுவில் இணைந்துக் கொண்ட பின்னர் இலங்கைக்கு உட்பட்ட ஆழ்கடல் வலயத்துக்குள் தேடுதல், மீட்டெடுத்தல், கடல் வளங்களை பாதுகாத்தல், கடல் நடவடிக்கைகளில் ஈடுபடும் கப்பல் மற்றும் வள்ளங்களுக்கு உதவிகளை வழங்குதல் ஆகியவற்றுக்காக இந்த கப்பலை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. (ம)

வாகரையில் வறட்சி கால்நடைகள் சாவு!

மட்டக்களப்பு, ஜூலை 9

கடும் வறட்சி காரணமாக மட்டக்களப்பு - வாகரைப் பகுதியில் கால்நடைகள் உயிரிழக்கும் நிலமை காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வாகரைப் பிரதேச செயலர் பிரிவில் கதிரவெளி பகுதியிலள்ள மானா குளம் சீரமைப்பு இல்லாமல் குளத்தில் நீர் வற்றிய நிலையில் காணப்படுவதால் கால்நடைகள் குடிப்பதற்கு நீர் இல்லாமல் உயிரிழக்கும் நிலமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.மானாகுளம்புனரமைப்புசெய்யப்படும்பட்சத்தில் கால்நடைகளின் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்த தீர்வு காண முடியும் எனவும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ம)

மைத்திரியின் அக்கறையின்மை தாக்குதலுக்கு முக்கிய காரணம்

சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 9

பாதுகாப்பு விடயத்தில் அரச தலைவருக்கு இருந்த போதிய அக்கறையின்மையே தற்கொலைத் குண்டுத்தாக்குதலுக்கு முதன்மைக் காரணம் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மண்டூர் கணேசபுரம் கண்ணகி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்ப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் பாதுகாப்பில் காணப்பட்ட மிகப் பெரிய ஓட்டை காரணமாக மனித குண்டு வெடிப்பில் 250க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் யார் குற்றம் செய்திருக்கிறார் என்ற விடயம் தொடர்பாக அரச தலைவருக்கும், பாதுகாப்பு செயலருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் இடையில் பலத்த போட்டிகள் நிலவுகின்றன. தலைமை அமைச்சர், பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோர் பாதுகாப்பு சம்பந்தமான கூட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது என பதைடவை அரச தலைவர் கூறியதன் காரணமாகவே இந்த கோரச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. பாதுகாப்பு விடயத்தில் அரச தலைவருக்கு இருந்த போதிய அக்கறையின்மையே தற்கொலை குண்டுத்தாக்குதலுக்கு முக்கிய காரணம் - என்றார். (ம)

இராணுவ பலத்தால் மட்டும் பாதுகாப்பை ஏற்படுத்த முடியா

அமைச்சர் சஜித் தெரிவிப்பு

கொழும்பு. ஜூலை 9

இராணுவ பலத்தால் மாத்திரம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாது. இராணுவ பாதுகாப்புக்கு மேலாக பொருளாதாரத்தின் உறுதிப்பாடு மற்றும் தேசிய ஒற்றுமையினூடாகவே தேசிய பாதுகாப்பை வலுப்படுத்த முடியும்.

இவ்வாறு அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் 30 வருட அரசியல் வாழ்க்கையைக் கௌரவிக்கும் வகையில் 'மங்களவின் அரசியல் பயணம்' நிகழ்வு நேற்றுமுன்தினம் மாத்தறை பிரதேசத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எமது தேசிய வருமானத்தில் 54 வீதமானவற்றை செல்வந்தர் அனுபவிக்கின்றனர். அடிமட்ட மக்களுக்கு பொருளாதார சலுகைகள் முழுமையாக சென்றடைவதில்லை. அனைவருக்கும் சமமானதும் சகல மக்களுக்கும் சென்றடைய கூடியதுமான எமது தனித்துவத்துக்கு ஏற்றது போன்ற பொருளாதார கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும்- என்றார்.

(எ)

அடுத்தடுத்து...

யில் நேற்றும் 145 கிலோ கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் அண்மையில் 200 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டிருந்தநிலையில்நேற்றுதிக்கத்தில்145கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

திக்கம்கடற்கரையில்இருந்துமோட்டார்உந்துருளியில் கஞ்சாவை ஏற்ற முற்பட்ட போதே நேற்று கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியேட்சகர் புத்தி உடுகமசூரிய தலைமையிலான குழுவினரே கஞ்சாவை மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் மற்றொருவர் தப்பியோடியுள்ளார் என்றும் காங்கேசன்துறை பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியேட்சகர் புத்தி உடுகமசூரிய தலைமையிலான குழுவினர் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் கைப்பற்றப்பட்ட கஞ்சா பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மேலதக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப் பொருள் ஒழிப்பு வாரம் என்றும், போதை ஒழிப்புச் செயற்திட்டம் என்றும் அரச தலைவர் என்னதான் திட்டங்களை ஆரம்பித்தாலும் போதைப் போதைப் பொருள் கடத்தலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (எ-21,26,173)

ரக்னா...

மாறு கடந்த வார இறுதியில் சட்ட மா அதிபரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான தப்புல டி லிவேரா, பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்த நிலையிலேயே ரக்னா லங்கா நிறுவனத்தின் தலைவர் விக்டர் சமர வீர கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை இன்று நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (எ)

மின்சார...

தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதால் பல இடங்களில் மின்சார வழங்கல் பாதிக்கப்படலாம் என மின்சார சபையை மேற்கோள் காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதனால் நாட்டின் பல பாகங்களிலும் சுழற்சி முறையில் சுமார் ஒரு மணி நேர மின்வெட்டு ஏற்படலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவை எரிபொருள் களஞ்சியம் வரை குழாய் இடும் நடவடிக்கையின்போது மோதரை பிரதேசத்தில் அண்மையில் குழப்பம் ஏற்பட்டது. அதற்கு அமைச்சர் ரவி கருணாநாயக்கவே பொறுப்பு என்று குற்றம் சாட்டியுள்ள பெற்றோலிய தொழிற்சங்கங்கள் இந்த பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் மின்சார சபைக்கு எரிபொருள் வழங்குவது நிறுத்தப்படும் என்று அறிவித்திருந்திருந்தன அதன்படி கடந்த மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் மின்சாரசபைக்கு எரிபொருள் வழங்குவதை நிறுத்துவதற்கு பெற்றோலியத் துறை தொழிற் சங்கங்கள் நடவடிக்கை எடுத்திருந்தன. அதையடுத்தே தற்போது மின்சார வழங்கல் பாதிப்படையும் நிலமை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, மின்சார சபைக்கு எரிபொருள் வழங்கல் நிறுத்தப்படும் என்று பெற்றோலிய தொழிற் சங்கங்கள் எச்சரித்தாலும் அதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என மின் சக்தி எரி சக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார். (எ)

நம்பிக்கையில்லா...

டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்றுக் காலை கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. அதில் இந்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன என்றும் அதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, காணி தொடர்பான சிறப்பு ஏற்பாடுகள் சட்டம் தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஒத்திவைப்புவேளை விவாதம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

விக்கி...

வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் தற்போது முரண்பட்டுக் கொண்டுள்ள நிலையில் இந்த இரு தரப்புக்களையும் சமரப்படுத்த புலம்பெயர் தளம் ஒன்றால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை ஆரம்பித்துள்ள நிலையில் இந்த இரு தரப்புக்களையும் இணைந்துத் தேர்தலில் களமிறக்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான பலமான சக்தியாகத் திகழ முடியும் என்ற நோக்கத்துடனேயே இந்த முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன.

அதற்காக ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த ஒருவர் இந்த இரு தரப்புகளையும் சந்தித்துத் தனித் தனியாகப் பேச்சுக்களை நடத்தியிருந்தார். அதன்பயனாக இந்த இரு தரப்புக்களும் நேற்று மதியம் சந்தித்துப் பேச்சு நடத்துவது என்று தீர்மானித்திருந்தன. இந்தநிலையில் சமரச முயற்சிகளில் ஈடுபட்டவர் நேற்று இரு கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவற்றின் இறுதி நிலைப்பாட்டை அறிந்து கொண்டார். இரு தரப்பினரும் தமது முடிவுகளில் இருந்து விட்டுக்கொடுப்புக்களைச் செய்யாத தால் இந்த சமசர முயற்சிகள் பிசுபிசுத்துப் போயுள்ளன.

தமிழ் மக்கள் பேரவை போன்று அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டுக் கூட்டாகத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று சி.வி.விக்னேஸ்வரன் விடாப்பிடியாக உள்ளார். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பை அகற்ற வேண்டும் என்பதில் விடாப்பிடியாக உள்ளது.

இந்த இரு தரப்புக்களும் தமது முடிவுகளில் இறுக்கமாக இருப்பதால் இந்தச் சமரச முயற்சி ஆரம்ப கட்டத்துடனேயே முடிவுக்கு வந்துள்ளது என்று அறிய முடிகின்றது. (எ-105)

தேசிய...

தார். வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றன. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

விழுந்து போகாமல் வாழ்வது மட்டுமல்ல விளையாட்டு, எப்போதெல்லாம் நாங்கள் விழுகின்றோமோ அப்போதெல்லாம் எழுவதுதான் விளையாட்டு. இந்த தேசத்தை, நாட்டை, சமூகத்தைப் பார்க்கும்போது அநேக நேரம் விழுந்த ஒரு நிலையில்தான் இருக்கும். ஏன் சிலர் எங்களை விழுத்தியிருக்கிற சந்தர்ப்பங்களையும் நாங்கள் அறிகின்றோம்

விழாமல் இருப்பதைவிட விழுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எழுந்து நிற்கும் மனோதைரியமும், ஆத்ம சக்தியும் கொண்ட ஒரு சமூகமாக நாங்கள் இருப்பதுதான் முக்கியம். தேசிய ரீதியில் 6ஆவது இடத்தில் இருக்கின்ற நாம் இனி முதலாம் இடத்துக்கு வருவதற்கான தடைகள் என்ன, சவால்கள் என்ன என்பதைப் பற்றியும், எந்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் நாங்கள் யோசிக்க வேண்டும்.

அநேக கஸ்டங்கள் மத்தியிலே மாணவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்கின்றீர்கள் என்பதை நாங்கள் அறிகின்றோம். இந்த முறை தேசிய ரீதியில் கலந்துகொள்ளும் மாணவர்களின் செலவுக்காக நான் 10 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்கிறேன். அவர்களுக்கு அந்தச் சலுகைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். பாதணியோ, உடைகளோ எதுவென எனக்குத் தெரியவில்லை. அந்தத் தேவையை நீங்கள் பார்த்து செய்து கொடுக்கவேண்டும்.

அந்தப் போட்டியிலே வெற்றி கொள்ளவேண்டும் என்பதுதான் எங்களுடைய அவாவாக இருக்கிறது. நாங்கள் வெற்றியின் அருகில் நிற்கிறோம். கடந்தமுறை எனக்கு கொடுக்கப்பட்ட எண்ணிக்கைகளின்படி, நாங்கள் மொத்தமாக 21 தங்கப் பதக்கங்களையும், 19 வெள்ளிப்பதக்கங்களையும், 23 வெண்கலப்பதக்கங்களையும் வென்றுள்ளோம். இந்த முறை இது குறைந்தபட்சம் 50 சதவீதத்தில் கூட வேண்டும். நீங்கள் கொழும்புக்குப் போய், கண்டிக்குப்போய் திரும்பும் போது நான் உங்களை வரவேற்பதற்கான உரிமையை எனக்குக் கொண்டு வாருங்கள், உங்களுடைய வெற்றியை தமிழ்த் தேசத்துக்கு கொண்டு வாருங்கள். அதுதான் உங்களுடைய பொறுப்பு. அதற்காகச் செய்யக்கூடிய எல்லா உதவிகளையும் நான் செய்யத் தயாராகஉள்ளேன். ஒரு பெரும் திட்டத்தை நாங்கள் தீட்டவேண்டும். நாங்கள் முதலிடம் பெறுவதற்கு என்ன வழிஎன்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும்- என்றார். (எ-21)

பூஜித்...

தலைமை நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அளுவிகாரே, சிசிற டீ ஆப்ரு, பிரியந்த ஜயவர்தன, பிரசன்ன ஜயவர்தன, எல்.டீ.பி. தெஹிதெனிய மற்றும் முர்து பெர்னான்டோ உள்ளிட்டோர் இந்த நீதியரசர் குழாமில் பெயரிடப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 21 தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் பிரதிவாதிகள் கடமைகளை நிறைவேற்றத் தவறினர் என்று தெரிவித்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டமா அதிபருக்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றை விசாரணை செய்வதற்காகவே தலைமை நீதியரசரால் இந்த 7 நீதியரசர்கள் கொண்டமுழுமையான ஆயம் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ உள்ளிட்டோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் அனைத்தும் எதிர்வரும் வெள்ளிக் கிழமை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (எ)

கல்முனை...

காளர் இன்றுவரை மாவட்டச் செயலகத்தில் பணியாற்றுகின்றார். அளித்த வாக்குறுதியின் பிரகாரம் உடன் பிரதேச செயலகத்தில் தனது பணியை பொறுப்பேற்றே ஆகவேண்டும் என்று கோரப்பட்டது. அதற்குரிய நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் கடற்படையினரின் பிடியில் உள்ள நிலத்துடன் சுமார் 30 ஏக்கர் நிலம் மக்களின் வாழ்விட நிலமும் ஓர் ஆலயத்துக்குச் சொந்தமான நிலமும் அடங்குவதால் அவற்றை விடுவிக்க வேண்டும். மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்பட்டும் அதை அந்தப் பகுதி மீனவ மக்கள் இன்றுவரை முழுமையாக பயன்படுத்த முடியவில்லை. அதற்கு காரணம் எதிர்த் திசையில் பாடசாலையை அண்மித்த பகுதியில் இருந்த அந்த மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்படவில்லை.

அந்த மக்களின் வாழ்விட நிலமான 262 ஏக்கர் நிலம் விடுவிக்கப்படாதமையால் அந்த மக்கள் இன்றும் முகாம்களில் தங்கியுள்ளனர். அவர்கள் சொந்த ஊர் திரும்பி தொழிலில் ஈடுபட முடியாத நிலமையே காணப்படுகின்றது. எனவே அந்த நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரு நிலவிடுவிப்பு கோரிக்கை தொடர்பில் அடுத்த வாரம் நாடாளுமன்ற அமர்வில் பதிலளிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது. (எ-105)

நந்தன...

புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேவன் டி சில்வாவால் சுமார் 6 மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பாக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். (எ)

தேர்தல்...

கைகளில் விரக்தியுற்றிருக்கும் நாட்டு மக்கள் தற்போது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் ஒன்றுபட்டு வருகின்றனர். குறிப்பாக சிங்கள பௌத்த மக்கள் மகிந்த ராஜபக்ச மீது நம்பிக்கை வைத்து இணைந்து செயற்பட ஆரம்பித்திருக்கின்றனர்.

தேரர்களும் எம்முடனே இருக்கின்றனர். அதைப் பிளவுபடுத்தி பௌத்தர்களை எம்மில் இருந்து தூரமாக்கவே தற்போது பொதுபல சேனா முயற்சிக்கின்றது. அதற்காகவே கண்டியில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய கூட்டத்தில், சிங்கள இராஜ்ஜியம் ஒன்றை அமைக்க ஒன்றுபட வேண்டும் என்று ஞானசார தேரர் அழைப்பு விடுத்துள்ளார்- என்றார். (எ)

முதன்மை...

யக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் இன்று இடம்பெறும். அப்போது அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் உடனடியாக தீர்மானம் எடுக்கவேண்டும் என நாங்கள் அழுத்தம் கொடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

ஷரிஆ...

அதிபர் ரவி செனவிரத்னவுக்கு இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார் என்றும், அதை மையப்படுத்தி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் [illegible] தெரிவித்துள்ளார். (எ)

ஒப்பந்த மீறலை ஏற்று யுரேனிய செறிவூட்டலை அதிகரித்தது ஈரான்

ஐரோப்பிய நாடுகளே காரணம் என்றும் குற்றச்சாட்டு

தெஹ்ரான், ஜூலை 9

அணுசக்தி ஒப்பந்தத்தை மீறியதை ஏற்றுக்கொண்ட ஈரான் செறிவூட்டப்பட்ட யுரேனியத் தயாரிப்பை அதிகப்படுத்தியிருப்பதை ஏற்றுக் கொண்டது. ஈரானின் யுரேனியச் செறிவூட்டல் அதிகரித்திருக்கிறது என்று ஐ.நா கண்காணிப்பகம் வெளியிட்ட இது குறித்த விசாரணை அறிக்கையை அடுத்தே ஈரான் அதை ஏற்றுக் கொண்டது.

நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாகச் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைத் தயாரித்து அணு ஒப்பந்த விதிமுறைகளை மீறியதாக ஈரான் கூறியது. இந்த யுரேனியம் அணு உலைகளுக்கான எரிபொருள் தயாரிப்புக்கு மட்டுமல்லாமல், அணு ஆயுதங்கள் தயாரிக்கவும் பயன்படும். ஆனால், அணு ஆயுதங்கள் தயாரிக்கும் எந்த நோக்கமும் இல்லை என்று ஈரான் வலுவாக மறுத்துள்ளது. அத்தோடு அணு ஒப்பந்தத்தைப் பேண வேண்டும் என்ற எண்ணம் ஈரானுக்கு உள்ளதாகக் குறிப்பிட்ட அந்த நாட்டின் துணை அயலுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, தங்கள் கடைமைகளைச் சரியாகச் செய்யத் தவறிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளே இதற்குக் காரணம் என்று குற்றஞ்சாட்டினார். ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்ததைத் தொடர்ந்து சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு ஈரான் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளில் இருந்து தன்னைக் காப்பாற்றுமாறு 60 நாள்கள் கால அவகாசம் வழங்கியது. அந்த 60 நாள்கள் அவகாசம் முடிவடையும் நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்துப்பேசியபோதே அப்பாஸ் ஆரக்சி மேற்கண்டவாறு தெரிவித்தார். அணு உலைக்கு எரிபொருள் வழங்குவதற்காக சில மணி நேரங்களுக்குள் 3.67 சதவீத அளவுக்குச் செறிவூட்டல் விகிதம் உடைய யுரேனியத்தைத் தயாரிக்கப் போவதாகத் தெரிவித்தார். அணு ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டுமாயின் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் விகிதம் 90 சதவீதம் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகிறது.

செறிவூட்டலை அதிகரித்தால் தடைகளும் அதிகரிக்கப்படும்

எச்சரிக்கை விடுத்தது அமெரிக்கா

வோஷிங்டன். ஜூலை 9

அணுமதிக்கப்பட்டுள்ள அளவைவிட அதிகளவில் யுரேனியச் செறிவூட்டலை ஈரான் அதிகரிக்குமானால், அந்த நாட்டின் மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார். ஈரானின் இந்தச் செறிவூட்டலை அதிகரிக்கும் நடவடிக்கையும், அவர்கள் உருவாக்கும் அணு ஆயுதங்களும் முழு உலகுக்கும் பெரிய அச்சுறுத்தல் என்றும் அந்தப் பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டார். தன் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐரோப்பிய நாடுகளை வற்புறுத்தி வந்த ஈரான், தங்கள் நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்படாவிட்டால் யுரேனியச் செறிவூட்டலை அதிகரிக்கப் போவதாக எச்சரித்தது. "அமெரிக்கா எங்கள் நாட்டின் மீது விதித்திருக்கும் பொருளாதாரத் தடையை நீக்காவிட்டால் நாங்கள் யுரேனியம் செறிவூட்டலை அதிகரித்துக் கொண்டே இருப்போம்" எனப் பதிவிட்டார் ஈரானின் துணை அயலுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி. அதையடுத்தே அமெரிக்காவின் சார்பில் மைக் பொம்பியோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.



பாக். பொருள்களுக்கு வரி உயர்வு தீர்மானம் நிறைவேற்றியது இந்தியா

புதுடெல்லி, ஜூலை 9

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகும் பொருள்களுக்கு 200 சதவீதம் சுங்கவரி விதிக்கும் 'இந்திய அரசின் முடிவை ஆதரித்து இந்திய நாடாளுமன்றில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பாகிஸ்தானில் உற்பத்தியாகின்ற மற்றும் அங்கிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாகும் பொருள்களின் மீது 200 சதவீதம் சுங்கவரி விதிக்க இந்தியத் தலைமை அமைச்சர் மோடி தலைமையிலான அரசு தீர்மானித்தது.

முன்னாள் நிதியமைச்சர் அருண்ஜெட்லியின் ஆலோசனைப்படி, இதற்கான அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த முடிவுக்கு நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்பதால் நிதித் துறை இணை இமைச்சர் அனுராக் தாக்குர் நாடாளுமன்றில் நேற்றுத் தீர்மானம் ஒன்றைத் தாக்கல் செய்தார். அதுவே நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டது.

பின்னணி

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் அன்று ஆயுத அமைப்பு ஒன்று இந்தியச் சிப்பாய்களைக் குறிவைத்து நடத்திய தாக்குதலில் 35 சிப்பாய்கள் சாவடைந்தனர். அதைத் தொடர்ந்து, இந்தியாவுக்கு மிகவும் உகந்த நாடு என்றுதான் அதுவரை பாகிஸ்தானுக்கு அளித்து வந்த சிறப்பு மதிப்பை இந்தியா நீக்கியது. நீக்கிய கையோடு இந்தத் தீர்மானத்தையும் முன்வைத்தார் மோடி. அதுவே தற்போது நிறைவேற்றப் பட்டுள்ளது.

ரஷ்யப் படைகளின் தாக்குதலால் சிரியாவில் 544 பேர் சாவு

டமஸ்கஸ், ஜூலை 9

சிரியாவில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் கடந்த 2 மாதங்களில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சாவடைந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காய மடைந்தனர். சிரிய மனித உரிமை ஆணையகமே இது குறித்துத் தகவல் வெளியிட்டது. அதில் சிரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள ஹமா மாகாணத்தில் கடந்த இரண்டு மாதங்களில் ரஷ்யப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் 544 பொதுமக்கள் சாவடைந்ததாகவும், அதில் 130 பேர் குழந்தைகள் என்றும் இந்தத் தாக்குதலில் 2ஆயிரத்து 177 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரிய மனித உரிமை ஆணையகத் தலைவர் அப்துல் கானி இதுகுறித்துக் கூறும்போது, "ரஷ்யாவும், சிரியப் படையும் வேண்டுமென்றே பொது மக்களைத் தாக்குகின்றன" என்றார்.

பாதுகாப்பாக இருக்குமாறு ஈரானுக்கு ட்ரம்ப் அறிவுரை

வோஷிங்டன், ஜூலை 9

ஈரான் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். ஈரான் 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தத்தை மீறி யுரேனிய இருப்பை அதிகரிக்க இருப்பதாகத் தெரிவித்தது. இந்த நிலையில், அமெரிக்காவின் நியூ ஜெர்சி மாநிலத்திலுள்ள வானூர்தி நிலையத்தில் ட்ரம்ப்பிடம் ஈரான் குறித்துப் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும்போதே 'ஈரான் பாதுகாப்பாக இருக்க வேண்டும்' - என்று தெரிவித்தார் ட்ரம்ப்.

சீனாவின் சுயாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கில் சீனாவுக்கு அதிகாரங்களைக் கையளிப்பதை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஹொங்கொங்கின் சட்டமன்றச் சபைக் கட்டடத்துக்குள் நுழைந்து அண்மையில் வன்முறையில் ஈடுபட்டனர். நாடாளுமன்ற அறைக்குள் எதிர்ப்பு வாசகத்தை ஏந்தியவாறு காணப்பட்ட நபர்களில் ஒருவர் இவர்.

'போயிங் 737' ரக வானூர்திகளை வாங்க மறுக்கிறது சவூதி நிறுவனம்

ரியாத், ஜூலை 9

அடுத்தடுத்து விபத்துக்குள்ளாகிய அமெரிக்கத் தயாரிப்பான 'போயிங்737' ரக வானூர்திகளைக் கொள்முதல் செய்வதற்குச் சவூதி அரேபியாவின் வானூர்திச் சேவை நிறுவனமான 'ஃப்ளையடீல்' மறுத்துள்ளது. 'போயிங் 737 மக்ஸ்' ரக வானூர்திகளை 30 வரையில் வாங்குவதற்குக் கைச்சாத்திட்டிருந்த ஒப்பந்தத்தைக் குறித்த நிறுவனம் கைவிட்டுள்ளது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இந்தோனேசியாவிலும், கடந்த மார்ச் மாதம் எதியோப்பியாவிலும் குறித்த ரக வானூர்திகள் விபத்துக்களை எதிர்கொண்டதில் அவற்றில் பயணித்த அனைவரும் சாடைந்திருந்தனர். இந்த

விபத்துக்களைத் தொடர்ந்து குறித்த ரக வானூர்திகள் பறப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. தமது இந்தத் தயாரிப்பிலுள்ள தவறுகளைச் சரி செய்து வருவதாகப் போயிங் நிறுவனம் தெரிவித்தது. இந்த நிலையிலேயே குறித்த ரக வானூர்திகளைவாங்கப்போவதில்லைஎன'ஃப்ளையடீல்' நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கம்

ஜகார்த்தா, ஜூலை 9

இந்தோனேசியாவில் நேற்றுச்சக்திவாய்ந்தநிலநடுக்கம் ஏற்பட்டது. இந்தோனேசியாவின் வடகிழக்குப்பகுதிக்கடலில்ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 'ரிக்டர்'அளவுகோலில்6.9 ஆகப் பதிவாகியது. இது மையம் கொண்டிருந்த கடல்ஆழம்10 கிலோமீற்றர்கள் ஆகும். இந்த நிலநடுக்கத்தையடுத்து அங்கு சுனாமிஎச்சரிக்கைவிடுக்கப்பட்டது. பின்னர் அந்த எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. இந்த நீலநடுக்கம் காரணமாக அங்குள்ளகட்டடங்கள்குலுங்கியதாகவும், அதிர்வுகள் தொடர்ந்து சில நொடிகள் நீடித்ததாகவும், மக்கள் அனைவரும் வீதிகளில் குவிந்தனர்என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பயணத்தின்போது சொகுசு விடுதிகளைத் தவிர்த்து தூதரகத்தில்தங்கும் இம்ரான்கான்

இஸ்லாமாபாத், ஜூலை 9

எதிர்வரும் வரும் 21ஆம் திகதி 3 நாள்கள் பயணமாக அமெரிக்காவுக்குச் செல்லவிருக்கின்ற பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான், அங்கு சொகுசு விடுதியில் தங்காமல் அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் தங்குவதற்கு முடிவு செய்துள்ளதாகப் பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பாகிஸ்தானின் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்றதிலிருந்து இம்ரான் கான் சிறந்த பல நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறார். ஏராளமான சிக்கன நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தினார். முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரீப்புக்கு இருந்த ஏராளமான சொகுசு மகிழுந்துகளை ஏலம் விட்டார். வீடுகளை ஏலம் விட்டார். அதிகாரிகளுக்கான சலுகைகளைக் குறைத்தார். அத்தோடு நீண்ட பகைமையுடன் இருந்து வரும் அயல்நாடான இந்தியாவின் தலைமை அமைச்சருடன் சமரசத்தில் ஈடுபடும் பல முயற்சிகளை எடுத்தார். ஆனால் இந்தியத் தலைமை அமைச்சர் அவை எல்லாவற்றையும் புறக்கணித்து வருகிறார். அத்தோடு பாகிஸ்தானில் இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்தில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கிறிஸ்தவப் பெண் ஒருவரை அந்தத் தண்டனையில் இருந்து விடுவித்தார். இவ்வாறாகப் பல விடயங்களில் முன்மாதிரியாகத் திகழ்ந்து வரும் அவர் எதிர்வரும் நாள்களில் அமெரிக்காவுக்



குப் பயணிக்கவிருக்கும் நிலையிலேயே அங்கு சொகுசு விடுதியில் தங்காமல் தூதரகத்தில் தங்குவார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தானின் பொருளாதாரம் அதளபாதாளத்தில் செல்வதால் வேறு வழியின்றி இதைச் செய்கிறார், பாகிஸ்தான் பணநெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில், சிக்கன நடவடிக்கை எடுத்தால்தான் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பதால், வேறுவழியின்றி இதுபோன்ற நடவடிக்கையில் இம்ரான் கான் இறங்கியுள்ளார் என்று இதுகுறித்து இந்திய ஊடகங்களும் செய்தி வெளியிட்டன.

பிரிட்டனின் அடுத்ததலைமை அமைச்சராக முன்னிலையிலுள்ளார் போரிஸ் ஜோன்சன்

லண்டன், ஜூலை 9

பிரிட்டனின் புதிய தலைமை அமைச்சருக்கான போட்டியில் பிரிட்டனின் முன்னாள் அயலுறவு அமைச்சர் போரிஸ் ஜோன்சனுக்கும், தற்போதைய அயலுறவு அமைச்சர் ஜெராமி ஹண்டுக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரையும், அடுத்த தலைமை அமைச்சரையும் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதிக்குள் வாக்குகள் எண்ணி முடிவு அறிவிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் 'ரைம்ஸ்' நாளிதழ் சார்பில் கன்சர்வேடிவ் கட்சியினர் மத்தியில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் போரிஸ் ஜோன்சனுக்கு 74 சதவீதம் பேரின் ஆதரவும் ஜெராமி ஹண்டுக்கு 26 சதவீத ஆதரவும் உள்ளமை உணரப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகப் போரிஸ் ஜோன்சன் அமோக வெற்றி பெற்றுப் பிரிட்டனின்அடுத்ததலைமைஅமைச்சர்ஆவார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

பின்னணி

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான 'பிரெக்ஸிட்' நடவடிக்கையை வெற்றிகரமாகச் செய்து முடிக்க இயலாத நிலையில், பிரிட்டனின் தற்போதைய தலைமை அமைச்சர் தெரசா மே பதவி விலகுவதாக அறிவித்தார். இதனாலேயே பிரிட்டனின் ஆளும் கட்சி புதிய தலைமை அமைச்சரையும், கட்சித் தலைவரையும் தெரிவு செய்யவுள்ளது. தற்போதைய தலைமை அமைச்சர் தெரசா மே, பக்கிங்ஹாம் அரண்மனைக்குச் சென்று ராணி இரண்டாம் எலிசபெத்தைச் சந்தித்துத் தனது பதவி விலகல் கடிதத்தை வழங்குவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. அதையடுத்துப் புதிய தலைமை அமைச்சர் பதவி ஏற்பார்.

இன்றைய நாள்

மேடம்: லட்சிய நோக்குடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபார நடைமுறை சிறப்பாக இருக்கும். சேமிக்கும் விதத்தில் உபரிவருமானம் கிடைக்கும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

இடபம்: உங்களின் முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டு எதிலும் சிந்தித்துச் செயல்படுவதும், பேச்சில் நிதானத்தைக்கடைப்பிடிப்பதும் நல்லது. எந்தவொரு காரியத்திலும் அதன் முழுப்பலனை அடையமுடியாமல் தடைகள் உண்டாகும்.

மிதுனம்: சிலர்உங்களிடம்கருத்துவேறுபாடு கொள்வர். தொழில் வியாபார நடைமுறையில்தடைகள்குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு பணம் கரையும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

கடகம்: பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். உற்பத்தி விற்பனை அதிகரித்து கூடுதல் லாபம் அடைவீர்கள். வழக்கு, விவகாரத்தில் அனுகூலத் தீர்வு வரும்.

சிம்மம்: பொதுநல நோக்குடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கலாம். வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

கன்னி: உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். தாராள அளவில் பணவரவுகிடைக்கும். அரசியல்வாதிகள் வெளியூர் பயணம் மேற்கொள்வர். அரசு வகையில் அனுகூலம் உண்டு.

துலாம்: செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி சீராக நிறைவேறும். பணவரவு திருப்தியளிக்கும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவு ஏற்படும். பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.

விருச்சிகம்: மனதில் தன்னம்பிக்கை பிரகாசிக்கும். தொழில் வியாபாரம் செழித்து புதிய சாதனை படைப்பீர்கள். கூடுதல் வருமானம் கிடைக்கும். வீடு, வாகனத்தில்நவீனமாற்றம்செய்வீர்கள்.

தனுசு: குடும்பத்தில் இருந்த குழப்பம் மறையும். தொழில், வியாபாரத்தில்வளர்ச்சிப்பணிமேற்கொள்வீர்கள். உறவினரால் இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்டகரமாக சுபசெய்தி வந்து சேரும்.

மகரம்: திட்டமிட்ட செயல் நிறைவேற தாமதமாகலாம். நம்பிக்கையுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில் ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால்அவதிப்படுவர்.

கும்பம்: குடும்ப சிரமம் பற்றி பிறரிடம் பேசவேண்டாம். தொழில், வியாபாரம்சீர் பெற கூடுதல் நேரம் பணிபுரிவது அவசியம். பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது.

மீனம்: நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைத்தவாய்ப்பை பயன்படுத்துவீர்கள். சேமிக்கவாய்ப்புண்டு. பிள்ளைகள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்.

ஈட்டி எறிதலில் ரக்ஸனா தங்கம்

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதலில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியை பிரதி நிதித்துவப்படுத்திய என். ரக்ஸனா தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டி எறிதலில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த என். ரக்ஸனா 23.80 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்த எஸ். பாத்திமா தில்சா 23.08 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், அச்சுவேலி சைவப்பிரகாசா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.கம்ஷா 20.82 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர். (422)

அஞ்சல் ஓட்டப் போட்டியில் மகாஜனா அணிக்கு தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 14 வயதுப் பெண்களுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணி தங்கப்பதக்கம் கைப்பற்றியது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 14 வயதுப் பெண்களுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணி 00:57.60 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கத்தையும், மானிப்பாய் சென். ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி 00:58.80 செக்கனில் ஓடி முடித்து வெள்ளிப்பதக்கத்தையும், கற்கிடந்தகுளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி 00:59.30 செக்கனில் ஓடி முடித்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

வலிகாமம் கல்வி வலயம்

வடக்கு மாகாண தடகளப் போட்டியில்

வலிகாமம் கல்வி வலயம் கிண்ணத்தை சுவீகரித்தது

மன்னார் கல்வி வலயம்

யாழ். கல்வி வலயம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டி புள்ளிகள் அடிப்படையில் வலிகாமம் கல்வி வலயம் 658 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்து கிண்ணத்தை சுவீகரித்தது.

யாழ்ப்பாணம் துரையாப்பா விளையாட்டு மைதானத்தில் மூன்று நாள்களாக இடம்பெற்று வரும் வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் போட்டிகள் நேற்று இடம் பெற்றன. இதில் 658 புள்ளிகள் அடிப்படையில் வலிகாமம் கல்வி வலயம் முதல் இடத்தைப் பிடித்தது.

மன்னார் கல்வி வலயம் 621 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், யாழ். கல்வி வலயம் 569 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், வடமராட்சி கல்வி வலயம் 323 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், வவுனியா தெற்கு கல்வி வலயம் 252 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும், கிளிநொச்சி கல்வி வலயம் 225 புள்ளிகளைப் பெற்று ஆறாம் இடத்தையும், மடு. கல்வி வலயம் 156 புள்ளிகளைப் பெற்று ஏழாம் இடத்தையும், தென்மராட்சி கல்வி வலயம் 154 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்தையும், முல்லைத்தீவு கல்வி வலயம் 146 புள்ளிகளைப் பெற்று ஒன்பதாவது இடத்தையும், தீவக கல்வி வலயம் 68 புள்ளிகளைப் பெற்று பத்தாவது இடத்தையும், துணுக்காய் கல்வி வலயம் 49 புள்ளிகளைப் பெற்று பதினோராவது இடத்தையும், வவுனியா வடக்கு கல்வி வலயம் 13 புள்ளிகளைப் பெற்று பன்னிரெண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன. (23)

விண்ணப்பம் கோரல்

இலங்கை பாடசாலைகள் பளுதூக்கும் சங்கம் நடத்தும் இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண்களுக்கான பளுதூக்கும் போட்டிகள் எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் கேகாலை மாவட்ட அருநாயக்க டிப்பிட்டி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வடக்கு மாகாணத்திலிருந்து பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் இலங்கை பாடசாலைகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் கனகராஜாவிடம் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (422)

தமிழ் கலாசாரத்தை வெளிப்படுத்திய

யூனியன் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நிகழ்வுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வில் யூனியன் கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது. வடக்கு மாகாண விளையாட்டு போட்டிகள் கடந்த மூன்று நாள்களாக துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று நேற்று நிறைவுக்கு வந்தது.

நேற்றைய இறுதிநாள் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வின் விருந்தினர் வரவேற்பு தமிழ் கலாரசாரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்தது. விருந்தினர்கள் அழைத்து வரப்படும் போது தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களின் இன்னியம் இசைக்குழுவினர் நிகழ்வு அனைவரது பாராட்டையும் பெற்றது. (7)

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் சிறந்த வீரராக மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த சென். ஆன்ஸ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். ஜேசுதாஸ் குருஸும், சிறந்த வீராங்கனையாக முருங்கன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த அனுசாலவும் தெரிவு செய்யப்பட்டனர். (23)

நீளம் பாய்தலில்

கிளி.மத்தி மாணவி அருணவி தங்கம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டியில் 14 வயதுப் பெண்களுக்கான நீளம் பாய்தலில் கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ். அருணவி தங்கம் வென்றார்.

வடக்க மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று முடிவடைந்தது.

நேற்று இடம்பெற்ற 14 வயதுப் பெண்களுக்கான நீளம் பாய்தலில் கிளிநொச்சி மத்திய கல்லூரியை பிரதிநிதித்து வப்படுத்தி எஸ். அருணவி 4.80 மீற்றர் தூரம் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், மானிப்பாய் சென். ஆன்ஸ் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜெசிஸ்பிரியா 4.66 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கப்பதக்கத்தையும், மகாஜனாக் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி எஸ். சுவர்ணவி 4.61 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும் சுவீகரித்தனர். (108)

பெண்களுக்கான தட்டெறிதலில்

வித்தியானந்த கல்லூரி மாணவி சௌகரியாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 18 வயதுப் பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வித்தியானந்த கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய சௌகரியா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 18 வயதுப் பெண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் வித்தியானந்த கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய சௌகரியா 25.99 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கத்தையும், வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய விதுர்சிகா 23.82 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப்பதக்கத்தையும், பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய சர்மிகா 23.36 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

தென்னாபிரிக்கா அணிக்காக 2020 வரை ஆடுவேன்

டு பிளசிஸ் தெரிவிப்பு

நடப்பு உலகக் கிண்ணத் தொடருக்கான தென்னாபிரிக்கா அணியில் விளையாடிய இம்ரான் தாஹிர், டுமினி, டு பிளசிஸ் ஆகியோர் இந்தத் தொடருக்குப்பின் ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். அதன்படி டுமினி, தாஹிர் ஆகியோர் தங்களது ஓய்வு முடிவை வெளியிட்டு ஓய்வு பெற்றுள்ளனர்.

ஆனால், டு பிளசிஸ் இன்னும் ஓய்வு முடிவை அறிவிக்கவில்லை. தென்னாபிரிக்கா அணி 2023ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் சிறப்பாக விளையாட வேண்டுமென்றால் அணியை சீரமைப்பு செய்ய வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இளம் வீரர் ஒருவரை அணித் தலைவராக உருவாக்கப்பட வேண்டும் என்றால் அவருக்கு அனுபவ மிக்க ஒருவர் தேவை. இதனால் அடுத்த வருடம் நடைபெறும் ரி-20 உலகக் கிண்ணத் தொடர் வரை விளையாட வாய்ப்புள்ளதாக டு பிளசிஸ் தெரிவித்தார்.

இன்றைய போட்டி

முதலாவது அரையிறுதி



11 வருடங்களின் பின்னர்

மீண்டும் சந்திக்கும் இரு துருவங்கள்

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில் இன்று முதலாவது அரையிறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது. இதில் விராட் கோக்லி தலைமையிலான இந்திய அணி, கேன் வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்த ஆட்டம் 2008ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணத் தொடரின் முதல் அரையிறுதி போட்டியை ஞாபகப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதில் கோக்லி தலைமையிலான இந்திய அணியும், வில்லியம்சன் தலைமையிலான நியூசிலாந்து அணிகள் மோதி இருந்தன.

இந்த அணியில் நியூசிலாந்து அணியில் கேன் வில்லியம்சன், டிரென்ட் போல்ட், டிம் சவுத்தி ஆகியோர் இடம் பிடித்திருந்தனர். இந்திய அணியில் விராட் கோக்லி, ஜடேஜா ஆகியோர் இடம் பிடித்திருந்தனர். இவர்கள் தற்போது நடைபெற இருக்கும் முதலாவது அரையிறுதி போட்டிக்கான அணியிலும் இடம் பிடித்துள்ளனர். அந்தப் போட்டியில் இந்திய அணி மழை காரணமாக டக்வேர்த் லூயிஸ் முறைப்படி வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருமகள் வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி வடக்கு மாகாண ரீதியிலான கழகங்களுக்கிடையிலே நடத்தப்படவுள்ளது.

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வை முன்னிட்டு லண்டன் வாழ் சதீஸ்வரன் தைரன் ஆதரவிலும் எம். எஸ். விஸ்வநாதன் குடும்பத்தினரது அனுசரணையுடனும் துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.



சுற்றுப்போட்டி 7 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் ரூபா 15 ஆயிரம் பணப்பரிசும், இரண்டாம் இடம் பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் ரூபா 10 ஆயிரம் பணப்பரிசும் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்பும் அணிகள் பதிவுகளை நேரடியாக சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ள முடியும். பதிவுகள் யாவும் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் யாவும் அரியாலை சரஸ்வதி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ)

ஆண்களுக்கான அஞ்சல் ஓட்டத்தில்

உடுத்துறை ம.வி. அணி தங்கத்தை சுவீகரித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 9

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 14 வயது ஆண்களுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் உடுத்துறை மகா வித்தியாலய அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று முடிந்த வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் 14 வயது ஆண்களுக்கான 4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் உடுத்துறை மகா வித்தியாலய அணி 00:53.70 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப்பதக்கத்தையும், முருங்கன் மகா வித்தியாலய அணி 00:53.90 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப்பதக்கத்தையும், பருத்தித்துறை ஹட்லிக்கல்லூரி அணி 00:53.90 செக்கனில் ஓடி முடித்து வர்ணச் சான்றிதழுடன் வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றின. (23)

இன்றைய போட்டியில் மழைக்கு வாய்ப்பு

நடப்பு உலகக் கிண்ணத்தில் இன்று முதலாவது அரையிறுதி ஆட்டம் இடம்பெறுகின்றது. இதில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டி மான்செஸ்டரில் உள்ள மிகப் பழமையான மைதானமான ஓல்டுடிராபோர்ட் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த மைதானத்தில் நடப்பு உலகக் கிண்ண லீக் போட்டிகளில் இந்திய அணி பாகிஸ்தானுக்கு எதிராகவும், மே.இதீவுகள் அணிக்கு எதிராகவும் இரு முறை மோதி வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை இந்த மைதானத்தில் 51 பன்னாட்டு ஒருநாள் போட்டிகள் நடந்துள்ளன. இந்த மைதானத்தில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகள் 40 சதவீதம் மட்டுமே வென்றுள்ளன.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இதுவரை இந்த மைதானத்தில் 4 ஆட்டங்கள் நடந்துள்ளன. அனைத்து ஆட்டங்களிலும் முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகளே வென்றுள்ளன.

மழைக்கு வாய்ப்பு?

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான இன்று இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டம் மழையால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மான்செஸ்டரில் இன்று காலையில் லேசான மழைச் சாரலும், வானம் மேகமூட்டமாகவும் இருக்கும் என்று இங்கிலாந்து வானிலை மையம் தெரிவித்துள்ளது.

காலையில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதால், ஆட்டம் தாமதமாகத் தொடங்கவும் சாதகமான சூழல் காணப்படுகிறது. ஆனால், நண்பகல் 1 மணிக்கு மேல் வானம் தெளிவாகக் காணப்படும். இதனால் நாணயச் சுழற்சியே வெற்றி, தோல்வியைத் தீர்மானிக்கப் போகின்றது.

கோபா அமெரிக்கா கால்பந்து தொடர்

12 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரேசில் கிண்ணம் வென்றது

பிரேசில் நாட்டில் நடைபெற்று வந்த கோபா அமெரிக்கா கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி நேற்று இடம்பெற்றது. இதில் பெருவை 3:1 என்ற கணக்கில் வீழ்த்தி பிரேசில் அணி 9ஆவது முறையாக 12 ஆண்டுகளுக்குப் பின்னர் கிண்ணம் வென்றது.

கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் பிரேசிலில் இடம்பெற்று வந்தது. இதில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பிரேசில் - பெரு அணிகள் மோதின.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்த 15ஆவது நிமிடத்தில் பிரேசில் அணியின் எவர்டன் முதல் கோலை பதிவு செய்தார். அதன்பின் முதல் பாதி நேரத்தின் கடைசி இரு நிமிடங்கள் வரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. 44 ஆவது நிமிடத்தில் பெரு அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை அந்த அணியின் வீரர் பவலோ குயேர்ரேரோ கோலாக மாற்றினார். முதல் பாதி ஆட்டத்தின் இறுதிக் கணத்தில் 45ஆவது நிமிடத்தில் பிரேசில் அணி வீரர் கேப்ரியல் ஜீஸஸ் ஒரு கோலைப் போட முதல் பாதி ஆட்டம் 2:1 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி நேர ஆட்டத்தில் இரு அணிகளும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் கோல் அடிக்கும் வாய்ப்பு இரு அணிகளுக்கும் கிடைக்கவில்லை. ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான கேப்ரியல் ஜீஸஸ் சிவக்கு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் பிரேசில் அணி 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. என்றாலும் பெரு அணி வீரர்களை கோல் அடிக்க விடாது அவர்கள் விளையாடினார்கள். ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 90 ஆவது நிமிடத்தில் பிரேசில் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை அந்த அணியின் வீரர் ரிச்சார்லிசன் கோலாக மாற்றினார். இறுதியில் பிரேசில் அணி 3:1 என்ற கணக்கில் பெரு அணியை வீழ்த்தி வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

வேலையாள்கள் தேவை
சாவகச்சேரியில் அமைந்துள்ள உணவகத்திற்கு சமையலாளர் தேவை
(CS 00640) (14.17)
077 531 7170

காணி விற்பனைக்கு
கொக்குவில் கிழக்கில் இரண்டு பரப்பு விஸ்தீரணம் உள்ள வெற்றுக்காணி விற்பனைக்கு.
பரப்பு 35 லட்சம்
076 971 8422

BACHOLOR OF INFORMATION TECHNOLOGY

தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் U.G.C அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பாகும். இரண்டு கல்வி ஆண்டுகள் கொண்ட இக் கற்கை நெறியின் ஒரு கல்வி ஆண்டு இரண்டு Semester களை கொண்டதாகும். இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள் நாட்டிலோ வெளிநாட்டிலோ உயர் ஊதியத்துடன் தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது உலகின் தலைசிறந்த பல் கலைக்கழகம் ஒன்றில் பட்ட மேற் படிப்பு கற்கை நெறி ஒன்றை தொடர்வ தற்கும் அமையும்

BACHOLOR OF INFORMATION TECHNOLOGY
TOP-UP DEGREE
(1 YEAR)

அரச அல்லது அரச அனுமதிபெற்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா (H.N.D) அல்லது இதற்கு நிகரான கல்வித் தகைமை உடைய மாணவர்கள் Bachelor of Information Techology பட்டப்படிப்பில் மூன்றாம் வருடத்திற்கு நேரடியாக உள்வாங்கப்படுவார்கள். (அதாவது மூன்று வருடகால பட்டப்படிப்பின் முதல் இரண்டு வருடகாலங்கள் விதிவிலக்கு. exemption வழங்கப்படும்.

(C/10630)(10)

மேற்படி பட்டப்படிப்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.

உடன் அழையுங்கள்
0777174443
www.blccampus.edu.lk

BLC CAMPUS
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk
LINCOLN UNIVERSITY COLLEGE
Recognized by:

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.07.2019 இல்